Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, JULY 11, 2022

திங்கட்கிழமை ஜூலை 11, 2022 | ஒளி: 08 கதிர் 044 | பக்கம்: 10 | நகரப்பதிப்பு | FREE

## அமைதியைப் பேண ஒத்துழைக்கவும்



நாட்டில் அமைதியை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரியும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா பொதுமக்களை கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழலுக்கு, அமைதியாகவும் அரசியலமைப்பு ரீதியாகவும் தீர்வு

தொடர்ச்சி P2

## சேர் விலகாவிடின் 13 ஹர்த்தால்

ஜனாதிபதி பதவியிலிருந்து ஜூலை 13 ஆம் திகதியன்று கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். அதன்பிரகாரம் ஜனாதிபதி பதவியிலிருந்து அவர் விலகாவிடின் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என தொழிற்சங்கங்கள் எச்சரித்துள்ளன.

சனிக்கிழமை (ஜூலை 9), சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில்,

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு உறுதுணையாக இந்தியா தொடர்ந்தும் செயற்படும்



இந்த நெருக்கடியின் போது இலங்கைக்கு உறுதுணையாக இந்தியா தொடர்ந்தும் செயற்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

முன்னேற்றங்களை கண்காணித்து வருவதாகவும், இப்போது அகதிகள் நெருக்கடி இல்லை என்றும் கூறினார். திருவனந்தபுரம் விமான நிலையம் அருகே செய்தியாளர்களிடம் கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## நிலைமைக்கு தீர்வு காண்பதே பொறுப்பு

### ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு




இலங்கையின் நிலைமைக்கு தீர்வு காண்பதற்கான வழியை தயாரித்து இலங்கையை வழமைக்கு கொண்டு வர வேண்டியது அனைத்து அரசியல் கட்சி தலைவர்களின் பொறுப்பாகும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை அலுவலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

### இலங்கைக்கான ஆதரவு உறுதி

## நாணய நிதியம் நம்பிக்கை

இலங்கையின் தற்போதைய சூழ்நிலைக்கு தீர்வு கிடைக்கும் என்று தாம் நம்புவதாகத் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், பிணை எடுப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க எதிர்பார்ப்பதாகவும் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் குறிப்பிட்டுள்ளது.



தொடர்ச்சி P2

## நீண்டகால தீர்வுகளுக்கு விரைவாக செயற்படுங்கள்

### அரசியல் கட்சிகளுக்கு அமெரிக்கா அழைப்பு




இலங்கை மக்களை திருப்திப்படுத்தும் நீண்ட கால பொருளாதார மற்றும் அரசியல் தீர்வுகளை அடைவதற்கு விரைவாக செயற்படுமாறு இலங்கையின் அரசியல் கட்சிகளுக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது.

தொடர்ச்சி P2

### தீ வைத்த நேரத்தில்

## மின்தடைப்பட்டது குறித்து விசாரணை

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லத்துக்கு சிலர் தீ வைத்த போது ஏற்பட்ட மின் துண்டிப்பு குறித்து உண்மையை வெளிப்படுத்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு முறையான விசாரணைகளை மேற்கொள்ளும் என ஆணைக்குழுவின் தலைவர்



ஜனக ரத்நாயக்க, நேற்று (10) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## பிரதமரின் இல்லத்துக்கு தீ வைத்த மூவர் கைது

### சீ.ஐ.டியிடம் விசாரணை கையளிப்பு

கொழும்பு 03இல் உள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக இல்லத்துக்கு தீ வைத்து எரித்த சம்பவம் தொடர்பில் மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ, நேற்று (10) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியும் பிரதமரும் அதிகாரத்தில் இருக்க முடியாது

### மைத்திரி தெரிவிப்பு 10 யோசனைகளும் முன்வைப்பு

நாட்டில் எழுந்துள்ள மக்கள் எதிர்ப்பின் பிரகாரம், தற்போதைய ஜனாதிபதிக்கோ, பிரதமருக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ அதிகாரத்தில் இருப்பதற்கு அரசியல் ரீதியாக அல்லது தார்மீக ரீதியாக உரிமை இல்லை என்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், பொறுப்பு வாய்ந்த அனைத்து தரப்பினருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 10 யோசனைகளை முன்வைத்துள்ளது.

1. ஜனாதிபதியும் பிரதமரும் உடனடியாக பதவி விலக வேண்டும்

2. ஜனாதிபதி நியமிக்கப்படும் வரை, சபாநாயகர் தற்காலிக ஜனாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும்

3. உத்தேச சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவதற்கு, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களைக் கொண்ட தேசிய நிறைவேற்று சபை அல்லது தலைமைத்துவ சபை நிறுவப்பட வேண்டும்

4. தேசிய செயற்குழு அல்லது தலைமைத்துவ சபை, சிவில் செயற்பாட்டாளர்கள், புத்திஜீவிகள், தொழில் வல்லுநர்களின் உடன்பாட்டுடன் ஜனாதிபதியும் பிரதமரும் நியமிக்கப்பட வேண்டும்

தொடர்ச்சி P2



## ஜூன் 9 கலவரம் 107 பேர் காயம்



கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் மற்றும் ஏனைய போராட்டத்தின் போது காயமடைந்த 107 பேர் தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவர்களுள் மூவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகவும் அதில் ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் 05 பெண்களும் அடங்குகின்றனர் என்பதுடன், பெரும்பாலானோர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாதுகாப்பு பிரிவை சேர்ந்த இருவரும் ஊடகவியலாளர்கள் 11 பேரும் இந்த சம்பவங்களில் காயமடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### எரிவாயு இறக்கும் பணிகளை

## உடனடியாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டா பணிப்பு

3700 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல், நேற்று (10) நாட்டை வந்தடைந்த நிலையில், குறித்த கப்பல் கெரவலப்பிட்டியவை சென்றடைந்தவுடன், எரிவாயுவை இறக்கும் பணிகளை உடனடியாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.



ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## லிட்ரோ சிலிண்டர் ரூ.50 ஆல் உயர்கிறது

எரிவாயு சிலிண்டரின் ஒன்றின் விலையை எதிர்வரும் காலத்தில் 50 ரூபாயால் அதிகரிக்கவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிவாயு சிலிண்டரின் விலையை 200 ரூபாயால் அதிகரிக்க வேண்டும் என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், ஏற்கெனவே தெரிவித்திருந்தார்.



எனினும், நாட்டு மக்களின் தற்போதைய அவல நிலையைக் கருத்தில் கொண்டு சிலிண்டர் ஒன்றின் விலையை 50

தொடர்ச்சி P2

### எரிபொருள் தட்டுப்பாடு

## தனியார் பஸ் சேவை பாதிப்பு

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக போக்குவரத்து சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

\சனிக்கிழமை (09) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டம் காரணமாக



பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த நிலையில்,

தொடர்ச்சி P2

## மீண்டும் இன்று கட்சித் தலைவர்கள் கூட்டம்

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், இன்று (11) மீண்டும் கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



(ஜூலை 9 நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படம்)

## இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை குறிக்கிறது

இந்திய கடன் உதவியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்ட 44,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான யூரியா தொகுதி, இலங்கையை நேற்று (10) வந்தடைந்தது.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவை நேற்று (10) காலை சந்தித்த இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால்



பாக்லே, 44,000 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான யூரியா இலங்கையை வந்தடையவுள்ளமை குறித்து அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## 4 அமைச்சர்கள் இராஜினாமா

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி சனிக்கிழமை (09) மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தை தொடர்ந்து, அமைச்சர்கள் நால்வர் தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளனர்.

16 நாட்களுக்கு முன்னர், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட இலங்கையின் பிரபல வர்த்தகர் தம்மிக்க பெரேரா



தனது, பதவியை இராஜினாமா செய்வதாக, நேற்று (10) அறிவித்துள்ளார்.

முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, தனது தேசியப்பட்டியல் எம்.பி பதவியை இராஜினாமா செய்ததையடுத்து, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் எம்.பியாக நியமிக்கப்பட்ட தம்மிக்க, பின்னர் அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இதேவேளை, சர்வ கட்சி அரசாங்கத்தை ஸ்தாபிப்பதற்கு இடமளித்து, தாம் இதுவரை வகித்த போக்குவரத்து, ஊடக, மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு பதவியை இராஜினாமா செய்வதாக பந்துல குணவர்தன, சனிக்கிழமை (09) இரவு அறிவித்திருந்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி, பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படவுள்ளதாகவும் தமது பேஸ்புக் பக்கத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாக மனுஷ நாணயக்காரவும், சுற்றுலாத்துறை அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வதாக ஹரின் பெர்ணான்டோவும், நேற்று முன்தினம் (09) இரவு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# சேர் விலகாவிடின் 13 ஹர்த்தால்

அவரது இல்லத்தில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் அவசரக்கூட்டத்தில், எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதற்கு பதிலளிக்கும் வகையில், ஜனாதிபதி பதவியில் இருந்து ஜூலை 13ஆம் திகதியன்று இராஜினாமா செய்துகொள்வதாக, தனக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார் என சபாநாயகர் மஹிந்த யாப்பா, சனிக்கிழமை (09) இரவு அறிவிப்பொன்றை விடுத்திருந்தார்.அதன்பிரகாரம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதி பதவியிலிருந்து அன்றையதினம் (ஜூலை 13) விலகாவிடின் "சேர் விலகாவிடின் 13 ஹர்த்தால்" எனும் தொனிப்பொருளில் ஹர்த்தால் முன்னெடுக்கப்படும் என தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகள் அறிவுறுத்தியுள்ளன.இதேவேளை, ஜூலை 13 ஆம் திகதியன்று பொது முடக்கத்துக்கு தயாராகுமாறு, சமூக வலைத்தளங்களிலும் பதிவுகள் இடப்பட்டுள்ளன.

# இலங்கைக்கு உறுதுணையாக இந்தியா தொடர்ந்தும் செயற்படும்



தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வை காண இலங்கை முயற்சித்து வருவதாகவும் அடுத்த நடவடிக்கை தொடர்பாக அவதானித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

"நாங்கள் இலங்கைக்கு ஆதரவாக இருந்து வருகிறோம், உதவி செய்ய முயல்கிறோம், எப்பொழுதும் உதவி செய்து வருகிறோம்" என்றார்.

# நிலைமைக்கு தீர்வு காண்பதே பொறுப்பு

அலுவலகம், நேற்று (10) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஜனநாயக மற்றும் அமைதியான அதிகார பரிமாற்றத்தில் கவனம் செலுத்தி அதற்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மக்களுக்கு வழங்கப்படும் ஆதரவை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாணய நிதியம் நம்பிக்கை

இலங்கையுடன் ஓர் இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்றும் நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி அதிகாரிகளுடன் தொழில்நுட்ப விவாதங்களைத் தொடர தாம் திட்டமிட்டுள்ளதாக நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுவர் பீட்டர் ப்ரூயர் மற்றும் தலைமை அதிகாரி மசாஹிரோ நோசாகி ஆகியோர், இலங்கையில் நடைபெற்று வரும் நிகழ்வுகளை சர்வதேச நாணய நிதியம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

**ஓகஸ்ட் மாதத்துக்குள் பணியாளர் மட்ட உடன்படிக்கைக்கு வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன**

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கம் காரணமாக ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் மீது ஏற்பட்டுள்ள பாரிய தாக்கம் குறித்து ஆழ்ந்த கவலை ஏற்பட்டுள்ளது என்றும் நிதியம் தெரிவித்துள்ளது.

கடினமான இந்த நேரத்தில், சர்வதேச நாணய நிதியக்கொள்கைகளுக்கு இணங்க, இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான தங்கள் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தியதாகவும் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை மத்திய வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் ஓகஸ்ட் மாதத்துக்குள் பணியாளர் மட்ட உடன்படிக்கைக்கு வரவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# நீண்டகால தீர்வுகளுக்கு விரைவாக செயற்படுங்கள்

அரசியல் கட்சியின் முன்னேற்றத்துக்காக அல்லாமல் இலங்கையின் முன்னேற்றத்துக்காக இலங்கை பாராளுமன்றம் பாடுபட வேண்டுமென அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர், நேற்று (10) தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்வரும் புதன்கிழமை (13) பதவி விலகத் தயாராகி வரும் நிலையில், தேசத்தின் முன்னேற்றத்துக்கான அர்ப்பணிப்புடன் இந்த தருணத்தை அணுகுமாறு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது என பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நீண்ட கால பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைவதற்கும், மின்சாரம், உணவு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு உள்ளிட்ட மோசமான பொருளாதார நிலைமைகள் தொடர்பாக இலங்கை மக்களின் அதிருப்தியை நிவர்த்தி செய்வதற்கும் தீர்வுகளை கண்டறியவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தீர்வுகளை கண்டறிந்து நடைமுறைப்படுத்துவதற்கு இந்த அரசாங்கத்தையோ அல்லது அரசியலமைப்பு ரீதியாக தெரிவுசெய்யப்படும் எந்தவொரு புதிய அரசாங்கத்தையும் துரிதமாக செயற்படுமாறு கேட்டுக்கொள்வதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

**தாக்குதல்களுக்கு அமெரிக்கா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன், சனிக்கிழமை போராட்டத்தின் போது இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் பிரதமரின் இல்லத்துக்கு தீ வைத்தமைக்கு அதிருப்தி தெரிவித்துள்ளது.**

இலங்கை மக்களுக்கு அமைதியான முறையில் குரல் எழுப்ப உரிமை உள்ளது என்றும் போராட்டம் தொடர்பான வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்ட எவரையும் முழுமையாக விசாரணை செய்யவும், கைது செய்யவும் மற்றும் வழக்குத் தொடரவும் தாம் அழைப்பு விடுப்பதாக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்

போராட்டக்காரர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களுக்கு அமெரிக்கா தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன், சனிக்கிழமை போராட்டத்தின் போது இடம்பெற்ற வன்முறைகள் மற்றும் பிரதமரின் இல்லத்துக்கு தீ வைத்தமைக்கு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

# மின்வெட்டு குறித்து விசாரணை

அமைதியின்மையின் போது அப்பகுதியில் மாலை 6 மணிக்குப் பின்னர் மின்வெட்டு எதுவும் திட்டமிடப்படாத போதிலும், அப்பகுதியில் மின்சாரம் துண்டிக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.



# பிரதமரின் இல்லத்துக்கு தீ வைத்த மூவர் கைது

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பேச்சாளர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் (09) இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் பிரதமரின் இல்லம் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கல்கிசை, ஜா-எல மற்றும் காலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்த பேச்சாளர், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரி மாளிகையைக் கைப்பற்றிய போராட்டக்காரர்கள், பிரதமரின் பிரத்தியேக இல்லத்துக்குள் உள்நுழைய முயன்றனர்.

இதன்போது, போராட்டக்காரர்களைக் கலைக்க பாதுகாப்புத் தரப்பினர் கண்ணீர்ப் புகைபிரயோகம் நடத்தியதைத் தொடர்ந்து, போராட்டக்காரர்களால் நீர்க் குழாய்கள் உட்பட பொதுச் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டது.

மேலும், பிரதமரின் இல்லத்துக்குள் நுழைந்த சிலரால் இல்லம் சேதப்படுத்தப்பட்டு தீ வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியும் பிரதமரும் அதிகாரத்தில் இருக்க முடியாது

5. நெருக்கடிக்கு முந்தைய நிலைக்கு நாட்டை மீண்டும் கொண்டு செல்வதற்கான நோக்கங்களை அடைய குறைந்த எண்ணிக்கையிலான நெருக்கடி மேலாண்மை அமைச்சரவை நியமிக்கப்பட வேண்டும்

6. நெருக்கடி மேலாண்மை அமைச்சரவையில் அந்தந்த அமைச்சகங்களின் கீழ் அறிஞர்கள், தொழில் வல்லுநர்கள், சிவில் ஆர்வலர்களைக் கொண்ட தேசிய ஆலோசனைக் குழு அமைக்கப்பட வேண்டும்

7. நெருக்கடியை நிர்வகிப்பதற்கு பொருளாதாரம், உணவுப் பாதுகாப்பு, அத்தியாவசிய சேவைகள், சமூக நலன் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டம், சமூக-அரசியல் சீர்திருத்த அணுகுமுறைகளை இலக்காகக் கொண்ட ஒருங்கிணைந்த மேலாண்மைத் திட்டம் மிக விரைவாக செயற்படுத்தப்பட வேண்டும்

8. 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தாமதமின்றி தேவையான உகந்த திருத்தத்துடன் மீண்டும் நிறைவேற்றப்பட வேண்டும்

9. நெருக்கடிக்கு முன்னரான நிலைக்கு நாடு திரும்பியவுடன், தேர்தலை நடத்தி, புதிய அரசாங்கத்தை நியமிக்கும் ஜனநாயக உரிமையை மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்

10. இலங்கை தேசத்தை கட்டியெழுப்புவதற்கும் இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதற்கும் தேவையான சட்ட மற்றும் அரசியலமைப்பு அடிப்படைகளை உருவாக்குவதற்கும், சமூக அரசியல் சீர்திருத்தங்களை நடைமுறைப்படு த்துவதற்கும் தேவையான கட்டமைப்பு மாற்றங்களை செய்வதற்கும் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பது புதிய அரசாங்கத்தின் முதல் நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்ற 10 யோசனைகளை அவர் முன்வைத்துள்ளார்.



# உடனடியாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி கோட்டா பணிப்பு

மேலும், ஜூலை 12 ஆம் திகதி முதல் எரிவாயு விநியோகம் முறையாகவும் சீராகவும் இடம்பெறும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இன்றையதினம் 3,740 மெற்றிக் தொன் எரிவாயு அடங்கிய இரண்டாவது கப்பல் வருகை தரவுள்ளதுடன், 3,200 மெற்றி தொன் எரிவாயுவை ஏற்றிய மூன்றாவது கப்பல் எதிர்வரும் 15 ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் வீடுகளுக்கான எரிவாயு தேவை தொடர்பான பிரச்சினை முற்றிலும் தீர்க்கப்படும் என லிட்ரோ நிறுவன தலைவர் முதித்த பீரிஸ் கூறியுள்ளார்.

# அமைதியைப் பேண ஒத்துழைக்கவும்

காண்பதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளதாக அவர் சில்வா குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அமைதியை பேணுவதற்கு முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் பாதுகாப்பு படைகளின் தலைமை அதிகாரி ஜெனரல் சவேந்திர சில்வா மக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தைத் தொடர்ந்தே மேற்குறிப்பிட்ட அறிவிப்பை அவர் விடுத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் இன்று கட்சித் தலைவர்கள் கூட்டம்

நிலவும் அரசியல் நெருக்கடி மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இன்று முற்பகல் 10 மணிக்கு கட்சித் தலைவர்களுக்கான கூட்டம் நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சனிக்கிழமை (09) பிற்பகல் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது குறித்து இன்று கலந்துரையாடப்படும் எனவும் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

# தனியார் பஸ் சேவை பாதிப்பு

நேற்றையதினமும் பஸ் சேவைகள் குறைவாகவே காணப்பட்டன.

இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களில் தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு அறிவித்திருந்த போதும் டீசல் முறையாக விநியோகிப்படவில்லை என, தனியார் பஸ் சங்கத்தினர் விசனம் தெரிவித்திருந்தனர்.

கடந்த வாரம் சில போக்குவரத்து சபை டிப்போக்களில் டீசல் வழங்கப்படாமை குறித்து அமைதியின்மை ஏற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றையதினம் (10) வழமை போன்று ரயில் சேவைகள் இடம்பெற்றதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.




**விசேட ரயில் சேவையொன்று நேற்றும் (10) இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது**

நேற்று முன்தினம் இடம்பெற்ற போராட்டத்துக்கு ஆதரவளிப்பதற்காக நாடு முழுவதிலும் இருந்து கொழும்புக்கு வருகை தந்த மக்களுக்காக விசேட ரயில் சேவை சனிக்கிழமை (10) முன்னெடுக்கப்பட்டதாக ரயில்வே பிரதி பொது முகாமையாளர் தெரிவித்தார்.

மேலும், நேற்றும் (10) விசேட ரயில் சேவையொன்று இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை குறிக்கிறது

விவசாயிகள் உட்பட இலங்கையின் சகலமக்களுக்குமான இந்தியாவின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை குறிக்கும் வகையிலும் நாட்டு மக்களின் உணவுப்பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான முயற்சிகளை வலுவாக்குவதாகவும் அண்மைய இந்த உதவி அமைவதாக உயர் ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார்.

# லிட்ரோ சிலிண்டர் ரூ.50 ஆல் உயர்கிறது

ரூபாயால் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், 3,700 மெற்றிக் தொன் எரிவாயு தொகுதியை ஏற்றிய கப்பல் ஒன்று, கொழும்பு துறைமுகத்தை நேற்று (10) வந்தடைந்தது.

அதற்கமைய இன்று (11) முதல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க திட்டமிட்டுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட 140 இடங்களில் 140,000 எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை, 3,700 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய மற்றுமொரு கப்பல் இன்று (11) இலங்கையை வந்தடையும் என, லிட்ரோ நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.




**எதிர்வரும் இரண்டு நாட்களுக்குள் கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட 140 இடங்களில் 140,000 எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் கூறினார்**

# ‘இலங்கை மக்களுடன் இந்தியா நிற்கிறது’



இலங்கை மக்களுடன் இந்தியா நிற்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் உத்தியோகபூர்வப் பேச்சாளர் அரிந்தம் பக்ஷி தெரிவித்துள்ளார்.

இலங்கையிலுள்ள நிலைமை தொடர்பான ஊடகக் கேள்விகளுக்கான பதிலளிப்பாகவே குறித்த கருத்தை பக்ஷி வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் கருத்துத் தெரிவித்த பக்ஷி, இலங்கையில் அண்மைய நிலைமைகளை தாங்கள் நெருக்கமாக அவதானிப்பதாகவும், அயல்நாடு முதன்மை கொள்கை மூலம் இலங்கையிலுள்ள மோசமான பொருளாதார நிலைமைக்கு மத்தியில் 3.8 பில்லியனுக்கும் அதிகமான உதவிகளை வழங்கியதாகக் கூறியுள்ளார்.




# புதிய தவணை ஜூலை 18 ஆரம்பம்

நாட்டில் உள்ள அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு மேலும் ஒரு வாரகாலம் விடுமுறை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் போக்குவரத்து பிரச்சினைகளை கருத்திற் கொண்டு இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக, அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் திங்கட்கிழமை (11) முதல் வெள்ளிக்கிழமை (15) வரை அனைத்து அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான பாடசாலை நாட்காட்டியின் அடிப்படையில் எதிர்வரும் ஜூலை 18ஆம் திகதி இரண்டாம் தவணை ஆரம்பமாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜம்இய்யத்துல் உலமா கடும் கண்டனம்

பிரதமரின் வீட்டுக்கு தீ வைக்கப்பட்டதை அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா வன்மையாகக் கண்டிப்பதோடு, இதில் ஈடுபட்டவர்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றது.

இதுதொடர்பில், அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பொதுச் செயலாளர் அஷ்-ஷைக் எம். அர்கம் நூறாமித் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

> **“ அபிவிருத்தியின் பால் அதனை இட்டுச் செல்ல நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்**

மக்கள் தமது கருத்துக்களை ஜனநாயக ரீதியாக முன்வைப்பது அவர்களது உரிமையாகும். எனினும், ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் போது உயிர் மற்றும் உடைமைகளுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலும், வன்முறையில் ஈடுபடாமலும், இது தொடர்பான நாட்டுச் சட்டங்களைப் பேணியும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்து கொள்ள வேண்டுமென்று நாம் அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆர்ப்பாட்டக் களத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டதை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், அதில் காயமடைந்தவர்களின் ஆரோக்கியத்திற்காக பிரார்த்திக்கின்றோம்.

அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலையிலும் எரிபொருள், மின்சாரம், பால்மா, உணவு வகைகள், மருந்துகள் போன்றன இன்றியும் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதை இந்நேரத்தில் ஒவ்வொருவரும் எண்ணிப்பார்த்து, தேவையுடையவர்களுக்கு உதவுவதற்கு முன்வர வேண்டும்.

நம் தாய் நாட்டில் அமைதியைக் கட்டியெழுப்பி, அபிவிருத்தியின் பால் அதனை இட்டுச் செல்ல நாம் ஒவ்வொருவரும் பொறுப்புடன் செயல்பட வேண்டும்.

### பிரதமர் இல்லத்துக்கு தீ: ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை

# இவ்விரு சம்பவங்களுக்கும் பலரும் கடும் கண்டனம்

கொழும்பு 7 இல் உள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியே இல்லம் சனிக்கிழமை (08) இரவு, தீ வைத்து கொளுத்தப்பட்டது. அதிலிருந்த பெறுமதியான பொருட்கள், புத்தகங்கள் உள்ளிட்டவை எரிந்து நாசமாகியுள்ளன.

பிரதமரின் இல்லம் தீ வைக்கப்பட்டமைக்கு பலரும் கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் கண்டத்தை வெளியிட்டுள்ளார்.


முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் கண்டனம் வெளியிட்டுள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், எம்.ஏ.சுமந்திரன் ஹர்ஷ டி சில்வா உள்ளிட்டோரும் கண்டனத்தை தெரிவித்துள்ளனர். அவர்களுடன் இராஜதந்திரிகளும் கண்டனம் வெளிட்டுள்ளனர். அத்துடன் சட்டத்தரணிகள் சங்கமும் சம்பவத்தை வன்மையாக கண்டித்துள்ளது.

அனைத்து வகையான வன்முறைகளையும் மன்னிக்கக் கூடாது என்றும், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியே இல்லத்துக்கு முன்பாக பதற்றமான நிலைமையொன்று அன்றையதினம் (ஜூலை 9) ஏற்பட்டதை அடுத்து அதுதொடர்பிலான செய்திகளை சேகரிக்கச் சென்றிருந்த எம்.டி.வி மற்றும் எம்.பி.சி வலையமைப்பின் (சிரச, சக்தி,எம்.டி.வி) ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் நால்வர் மீது படையினர் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

இந்த தாக்குதல்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் தலைவர்கள், ஊடக அமைப்புகள் கடுமையான கண்டனத்தை தெரிவித்திருந்தனர்.

எனினும், தாக்குதல்களை நடத்தியதாகக் கூறப்படும் பொலிஸாருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென பொலிஸ் தலைமையகம் வெளியிட்டிருந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.



# போராட்டம் மீதான நம்பிக்கை சரியாது

## தாக்குதலுக்கு உள்ளான ராஜித அறிவிப்பு



யாரோ ஒரு நபரோ அல்லது சிலராலோ தன் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தால் போராட்டம் தொடர்பில் தான் வைத்திருக்கும் நம்பிக்கை சரியாது என போராட்டத்தின் போது தாக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இலங்கை வரலாற்றில் இடம்பெற்ற தனித்துவமான அரசியல் போராட்டம் இது எனவும் தெரிவித்தார்.

ராஜபக்ஷக்கள் குடும்பத்தினரை தேர்தல் ஒன்றினூடாக மாத்திரம் தோற்கடிப்பது போதுமானது இல்லை என 2015 - 2019ஆம் ஆண்டு வரையில் நாம் தெரிந்து கொண்டோம். சர்வாதிகாரம் வெறி பிடித்த இந்த குடும்பத்தை பாரிய அளவிலான மக்கள் எழுச்சியின் ஊடாகவே முடிவு கட்ட முடியும் என்பதற்கு உலக அரசியல் வரலாற்றில் தேவையானளவு உதாரணங்கள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

என்னை தாக்கினவரின் நோக்கம் சிறந்த நாட்டை உருவாக்குவதா? என என்னுள்ளே கேள்வி எழுவதாகவும், தன்னால் விலை குறைக்கப்பட்ட மருந்து பொருட்களை என்னை தாக்கியவர் அருந்தியிருப்பார் எனவும் கூறினார்.

எவரையும் வெறுப்பதில்லை. உலகில் புனிதமான போராட்டங்கள் என்று எதுவும் இல்லை. புனிதமான நோக்கங்களே உலகில் இருக்கின்றன. நோக்கங்களுக்கான பயணத்தின் போது அவமானப்படுவதற்கும் தாக்கப்படுவதற்கும் கொலை செய்யப்படுவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. இவை அனைத்தும் இறுதியில் முக்கியமான ஒன்றாக இருக்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.


# கோட்டாவின் மகன் வீட்டுக்கு சென்ற இலங்கையர்கள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் மகன் மனோஜ் ராஜபக்ஷவின் அமெரிக்க வீட்டின் முன்பாக நேற்று (10) இலங்கையர்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டனர்.

தேசியக்கொடியை ஏந்தியவாறு மனோஜ் ராஜபக்ஷவின் வீட்டுக்கு முன்பாக சென்ற இலங்கையர்கள் சிலர் மனோஜ் ராஜபக்ஷவின் வீட்டுக்கு அருகில் உள்ளவர்களை அழைத்து இலங்கை மக்களின் கொள்ளையடித்த பணத்தில் மனோஜ் ராஜபக்ஷ சுகபோகமாக இங்கு வாழ்வதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

“இவரது பெயர் மனோஜ் ராஜபக்ஷ. தந்தை இலங்கையில் கொள்ளையடித்து சேர்த்த பணத்தில் இவர் இங்கு சுகபோகமாக வாழ்கிறார்.

ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்றிணைந்து கோட்டாபாய் ராஜபக்ஷபை ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டி அடித்துள்ளனர். மனோஜ் ராஜபக்ஷ வசிக்கும் இந்த சொகுசு வீடு இலங்கை மக்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பணத்தில் கட்டப்பட்டது.” எனவும் போராட்டக்காரர்கள் இதன்போது தெரிவித்தனர்.





# இன்று அதிகரிக்காது

இன்று (11) நள்ளிரவிலிருந்து அமுல்படுத்தவிருந்த ரயில் கட்டணத் திருத்தமானது, பிற்போடப்பட்டுள்ளது.

குறித்த ரயில் கட்டண திருத்தம் தொடர்பில் காணப்படும் சட்டரீதியான சிக்கலே, இதனை பிற்போடுவதற்கான காரணமென ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

### பேக்கரி பொருட்கள் 2,3 நாட்களில்

## கண்ணாடிப் பெட்டியில் இருந்து காணாமல் போகும்

நாட்டில் நிலவும் தற்போதைய நெருக்கடி மற்றும் ஆபத்தான பொருளாதார சூழ்நிலை காரணமாக, பாண் உட்பட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி இன்னும் இரண்டு அல்லது மூன்று நாட்களில் முடிவுக்கு வரும் என்று அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித்தார்.

நிலவும் எரிபொருள் நெருக்கடி, மூலப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு காரணமாகவே இந்த நிலை ஏற்படும் என்று தெரிவித்த அவர், தற்போது 50 சதவீதமான பேக்கரிகளில் உற்பத்திகள் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மீதி பேக்கரிகளின் நடவடிக்கையும் மிக விரைவில் நின்றுவிடும் என்றும் குறிப்பிட்டார்.

பேக்கரித் தொழில் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருவதாகவும், நிலவும் எரிபொருள் நெருக்கடியினால் மேலும் வீழ்ச்சியடையும் எனவும் பொறுப்பான உறுப்பினர் என்ற வகையில், தான் முன்னரே குறிப்பிட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், இந்த எரிபொருள் நெருக்கடி குறித்து மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சரிடம் தெரிவித்தபோதும் அமைச்சரிடம் இருந்து இதுவரை எந்த பதிலும் கிடைக்கவில்லை என்றார்.



# வன்முறையை எதிர்ப்போம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தை இலக்கு வைத்து சில நாசகார குழுவால் தீயிட்டு எரித்ததை வெறுப்புடன் கண்டிப்பதோடு, இச்சம்பவத்தில் தொடர்புடைய அனைவர் மீதும் நியாயமான விசாரணை நடத்தப்பட்டு, தராதரம் பாராமல் தண்டனை வழங்கப்பட வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.




ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியால் ஆளப்படும் சமூகத்துக்காக இந்நாட்டின் ஒட்டுமொத்த மக்களும் ஒரு சிவில் போராட்டத்தில் இணைந்தனர் என்பதோடு,அதன் உன்னத நோக்கங்களை ஒருபோதும் காட்டிக் கொடுக்காத அளவுக்கு அவர்கள் ஒழுக்கமும் நாகரீகமும் கொண்டவர்கள் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம் என்றும் தெரிவித்துள்ளது.

ஆனால் அந்த போராட்டத்தின் போர்வையில் சில சந்தர்ப்பவாத மற்றும் சீர்குலைக்கும் எண்ணப்பாடுகள் கொண்ட குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட சொத்துச் சேதங்கள்,

தீ வைப்புச் சம்பவங்கள்,மக்களின் இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்கும் சிறு சிறு சம்பவங்கள் என்பவற்றை நிபந்தனையின்றி முற்றாக எதிர்க்கிறோம்.

கடந்த சில நாட்களில்,பேராட்டக்காரர்கள், சிவில் ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், குடிமக்கள் உட்பட ஏராளமான மக்கள் வன்முறையை எதிர்கொள்ள வேண்டியிருந்ததோடு, இது குறித்தும் விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறோம்.

வன்முறையற்ற அமைதியான நாட்டிற்காக பாதுகாப்பாக கட்டமைக்கப்பட்ட குடிமக்களின் போராட்டத்திற்கு கறுப்பு புள்ளிகளை சேர்க்க முயலும் வெளிச் சக்திகள் பற்றி ஒட்டுமொத்த சமூகமும் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இது மிகவும் முக்கியமான தருணம் என்பதால், அமைதியாகவும்,நிதானமாகவும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் ஒன்றுபடுமாறு அனைத்து குடிமக்களையும் நாங்கள் மரியாதையுடன் அழைக்கிறோம் என்றும் அக்கட்சி விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இலங்கைக்கு கடத்தப்படவிருந்த

# 450 கிலோ கிராம் கடலட்டை பறிமுதல்

இலங்கைக்கு கடத்துவதற்காக கொண்டுவரப்பட்ட 450 கிலோ கிராம் கடலட்டை பறிமுதல் செய்யப்பட்டுள்ளதோடு இருவரை வனத்துறை கைது செய்துள்ளனர். குறித்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (10) மதியம் ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி அருகே இடம் பெற்றுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி அருகே இருமேனி பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக கடலட்டை ஓட்டோவில் கொண்டு செல்லப்படுவதாக வனத்துறைக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற வனத்துறையினர் ஓட்டோவில் கொண்டுவரப்பட்ட 450 கிலோ கிராம் கடலட்டையை பறிமுதல் செய்தனர். இது இந்திய அரசால் தடை செய்யப்பட்ட கடலட்டையாகும்.



இதன் போது சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு பேரை கைது செய்து கடத்தலுக்கு பயன்படுத்திய ஓட்டோ, இருசக்கர வாகனத்தையும் பறிமுதல் செய்ததோடு, குறித்த கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தொடர்பான விசாரணைகளை வனத்துறை அதிகாரிகள் நடத்தி வருகின்றனர் என இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### போராட்டக்காரர்களை தாக்கிய

# பொலிஸ், இராணுவ அதிகாரிகளுக்கு ஆப்பு

ஜூலை ஒன்பதாம் திகதி ஜனாதிபதி பிரதமருக்கு எதிரான போராட்டங்களின் போது பொதுமக்கள் மீது மிலேச்சுத்தனமான தாக்குதலை மேற்கொண்ட பொலிஸ், இராணுவ, விசேட அதிரடிப்படையினருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் முன் வந்துள்ளது

ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போராட்டக்காரர்கள் மாளிகைக்குள் உள் நுழையும் போது அங்கிருந்து பாதுகாப்பு தரப்பினால் கடுமையாக தாக்கப்பட்டனர். இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தது.

அதுபோல அமைதியாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போராட்டக்காரர்கள் மீது இராணுவ வீரர் ஒருவர் துப்பாக்கியால் சுடுவதையும் அவதானிக்க முடிந்தது. இதுபோன்ற பாதுகாப்பு தரப்பினரின் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு எதிராக அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க இலங்கை இளம் ஊடகவியலாளர் சங்கம் முன் வந்துள்ளது.



# ஆஸி செல்ல முயன்ற மேலும் 67 பேர் கைது

படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட 67 பேர், வாழைச்சேனை கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இலங்கை கடற்படை தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர்களுள் 11 சிறுவர்களும் 6 பெண்களும் அடங்குகின்றனர் என்றும் அவுஸ்திரேலியாவுக்கு செல்வதற்காக படகில் பயணத்தை ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கடற்படை தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது, இவர்களில் படகின் ஓட்டுநரும் மக்களிடம் பணத்தைப் பெற்றுக்கொண்ட முகவரும் தவிர்ந்த ஏனையவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் இருவரும் மேலதிக விசாரணைகளுக்காக எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வட்டுவாகல் சப்தகன்னியர் கோவில் விவகாரம்;

# நீதிமன்றில் பாரப்படுத்தவும்

## பொலிஸாரிடம் கோவில் நிர்வாகம் கோரிக்கை

விஜயரத்தினம் சரவணன்




முல்லைத்தீவு - வட்டுவாகல், சப்தகன்னியர் கோவில் விவகாரம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக இராணுவத்தினர் மற்றும் கோவில் நிர்வாகத்தினர், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், அன்ரனி ஜெயநாதனன பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரை மீண்டும் முல்லைத்தீவுப் பொலிஸார் அழைத்திருந்தனர்.

குறித்த விசாரணையின்போது தீர்த்தம் எடுப்பதற்காக பயன்படுத்தும் வீதி மற்றும் சப்தகன்னியர் கோவிலின் வருடாந்த பொங்கலின் இறுதிப்பூசை இடம்பெறும் இடம் என்பவற்றை கோவில் நிர்வாகம் பயன்படுத்துவதற்கு இராணுவத்தினர் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

எனவே, கோவிலுக்குரிய காணிக்குள் இராணுவத்தினர் கட்டடம் அமைத்து பாதுகாப்புக் கடமைகளை மேற்கொண்ட இடத்தை இராணுவத்துக்கு மீள வளங்கமுடியாதென கோவில் நிர்வாகத்தினரும் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, இந்த விவகாரத்தை விரைவுபடுத்தி நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாரை, சப்தகன்னியர் கோவில் நிர்வாகத்தினர் கோரியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர், கோவில் நிர்வாகத்தினர், முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், அன்ரனிஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரை மீண்டும் விசாணைக்கென முல்லைத்தீவு பொலிஸார் அழைத்திருந்தனர்.

தமது காணியில் இராணுவத்தினர் இருப்பதற்கு அனுமதிக்கமுடியாதென கோவில் நிர்வாகத்தினர் தெரிவித்ததுடன், தீர்த்தம் எடுக்கப் பயன்படுத்தும் பாரம்பரிய வீதியை தம்மாலும் விடமுடியாதெனவும், வருடாந்தப் பொங்கலின் இறுதிப்பூசை இடம்பெறும் இடத்தையும் வடமுடியாது எனவும் இராணுவத்தினர் தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் இந்த விடயத்தை நீதிமன்றில் பாரப்படுத்துமாறு பொலிஸாரிடம் கோவில் நிர்வாகத்தினர் கேட்டுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



# கர்ப்பிணிகளுக்கு

எரிபொருள் விநியோகம்

விசேட சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்குச் செல்லும் கர்ப்பிணித் தாய்மாருக்கு, எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சித்து வருவதாக கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கஷ்டமான நிலை மற்றும் விசேட சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற மாவட்டங்களுக்குச் செல்லும் கர்ப்பிணித் தாய்மாருக்காக எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றோம்.

ஏனையவர்கள் தமது பிரதேசத்தில் உள்ள மருத்துவ தாதிகளின் உதவியுடன் அருகில் உள்ள சிகிச்சை நிலையங்களுக்குச் சென்று சிகிச்சை பெறவும், அல்லது போக்குவரத்துக்காக அம்பூலன்களை பயன்படுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நவாலி சென். பீற்றர்ஸ்

# தேவாலய படுகொலை நினைவு தினம்



எம்.றொசாந்த்

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீதான விமான தாக்குதலின் 27ஆம் ஆண்டு நினைவுதினம், சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் நேற்று முன்தினம் (09) மாலை நினைவு கூரப்பட்டது.

சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் பங்குத்தந்தை தலைமையில் வழிபாடுகள் நடைபெற்றன. அதனை தொடர்ந்து உயிரிழந்தவர்களின் உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் மலர் தூபி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

1995 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09 திகதியன்று நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் கோவிலிலும் இடம்பெயர்ந்து தங்கியிருந்த மக்கள் மீது விமானப் படையினரின் மூன்று விமானங்கள் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியதில் குழந்தைகள், பெண்கள் உட்பட 147 பேர் பலியாகினர். 350க்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர்.

அன்று அதிகாலை வலிகாமம் பிரதேசங்களை நோக்கி எறிகணை தாக்குதல், விமான தாக்குதல்களின் உதவியுடன் இராணுவத்தினர் முன்னேறிப்பாய்தல் (Leap forward ) எனும் இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டனர்.

தொடர் எறிகணை தாக்குதல்களால் தமது வாழ்விடங்களை விட்டு, நவாலியை நோக்கி இடம்பெயர்ந்த மக்களே நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயத்திலும் நவாலி ஸ்ரீ கதிர்காம முருகன் கோவிலிலும் தஞ்சமடைந்திருந்தனர்.

அமிர்தலிங்கத்தை தோற்கடிப்பதற்கு

# நாமும் காரணமாய் இருந்தோம்

## 33ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு ஆனந்தசங்கரி அறிக்கை



அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் 33ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும் செயலாளருமான வீ.ஆனந்தசங்கரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

“1970ஆம் ஆண்டுக்கு முன்பு நானும் அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களும் வெவ்வேறு கட்சிகளை சேர்ந்தவர்களே. 1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அமரர் அமிர்தலிங்கம் அவர்கள் தோற்கடிக்கப்பட நாமும் காரணமாய் இருந்தோம்.

“அன்னாரின் பரம விரோதியாக அரசியலில் இருந்த அமரர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்கள் தானே தோல்வியுற்றிருந்த வேளையிலும் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் தோல்வி தமிழினத்துக்கு ஏற்பட்ட ஒரு பெரும் இழப்பென கூறியதன் மூலம் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் மதிப்பிட முடியாத பெறுமதியை வெளிப்படுத்தினார்.

“நான் அமிர்தலிங்கம் அவர்களுடன் கருத்து வேறுபாடு கொள்ளாதவன் அல்ல. ஆனால், அவை அனைத்தும் உள்வீட்டுப் பிரச்சினையே அன்றி, வெளியுலகிற்கு வரவில்லை. கிளிநொச்சியை தனிமாவட்டமாக ஆக்குவதில் எம்மிடையே கருத்து வேறுபாடு இருந்தபோதும் கடைசிக் காலத்தில் கிளிநொச்சி மாவட்டம் இன்றைய சூழ்நிலைக்கு சாதகமாக அமைந்துள்ளது எனவும் பாராட்டியுள்ளார்.

“1974ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மகாநாட்டில் அமரர் தந்தை செல்வா, அமரர் ஜீ.ஜீ.பொன்னம்பலம், அமரர் தொண்டமான் ஆகியோர் புதிதாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கூட்டுத் தலைவர்களாகவும் அமிர் செயலாளர் நாயகமாகவும் ஏகமனதாக தெரிவானார்கள்.

“அமரர் ஜீ. தலைவர்களில் ஒருவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் உயிருடன் இருந்தும் தலைவர் பதவியை தான் ஏற்கவில்லை என்று ஒரு சந்தர்ப்பத்திலும் தெரிவிக்கவில்லை.

“தந்தை செல்வா தலைவர்கள் அமிர் சிவா போன்றவர்களுடன் ஏக காலத்தில் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவன். அவர்களுடன் பலதரப்பட்ட கட்சிப் பணிகளில் ஈடுபட்டவன்.

“சத்தியாக்கிரகங்கள் உண்ணாவிரதங்கள் சமபந்தி போசனங்கள் கிராம யாத்திரைகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டவன் என்ற முறையில் நான் பெருமைப்பட நியாயமுண்டு.

“அமிர் அவர்கள் அமரத்துவம் அடைவதற்கு சில நாட்களுக்கு முன்பு நான் அவருடன் பிரயாணம் செய்து சென்னையில் அவரை விட்டு பிரியும் போது அதுதான் நமது இறுதி சந்திப்பு என நான் கனவிலும் எண்ணவில்லை.

“நாம் பிரியும் போது அன்னார் எனக்கு கூறியது இன்றும் என் காதுக்குள் ஒலித்துக் கொண்டிருக்கும் வார்த்தைகள். ‘சங்கரி எம்மை எது காத்திருக்கிறது என்பதை நாம் அறிவோம் இருப்பினும் எம்மில் சிலர்

“அதற்கு முகம் கொடுத்துதான் ஆக வேண்டும்’ என்றார். அவரது இறுதி வார்த்தைகள் அவரின் தீர்க்க தரிசனமாகவே அமைந்தது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்”என்றார்.

பயணிகளுடன்

# வீதியில் நின்ற இ.போ.ச பஸ்

## எரிபொருள் தீர்ந்ததால் நிர்க்கதி

ஹஸ்பர்




கிண்ணியா, கந்தளாய் ஊடான பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று எரிபொருள் தீர்ந்து போனதால், பயணிகளுடன் நடு வீதியில் நின்ற சம்பவம், நேற்று (09) காலை இடம்பெற்றது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிண்ணியா சாலைக்குச் சொந்தமான பஸ்ஸே இவ்வாறு டீசல் தீர்ந்து போனதால் தம்பலகாமம் -கிண்ணியா பிரதான வீதியில் நின்றுள்ளது. தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு நிலையே இதற்கான காரணமாகும் ஆகும்.

கந்தளாயில் இருந்து கிண்ணியா நோக்கிப் பயணிகளை ஏற்றியவாறு பயணித்த நிலையிலேயே பஸ் வீதியில் நின்றமையால் மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கினர்.

கிண்ணியா பஸ் டிப்போவில் இருந்து டீசல் பெறப்பட்டு, மீண்டும் பஸ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. இதனால் சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக பொதுமக்கள் வீதியில் காத்திருந்ததாக தெரிவிக்கின்றனர்.

# ஜனநாயக வெற்றி



சகா

இன்றைய இறுக்கமான காலகட்டத்தில் ஜனநாயகம் வெற்றி பெற்றிருக்கின்றது . அநியாயம், அடாவடித்தனம், அதர்மம் ,அயோக்கியத்தனம் அழிந்திருக்கின்றது என காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

அதேவேளை, இதே நாட்டில் பிறந்து பல்வேறு சொல்லொணா துன்ப துயரங்களை அனுபவித்த தமிழர்களின் நீண்ட கால உரிமைக் குரலுக்கு நீதி கிடைக்குமா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

நாட்டின் சமகால அரசியல் நிலைமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், “நாங்கள் எங்களுடைய இன விடுதலைக்காகவும், நில விடுதலைக்காகவும் ஜனநாயக ரீதியாக இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றோம்.

“ எமது இந்த அவல குரலும் இந்த கூக்குரலும் வருகின்ற அரசாங்கத்துக்காவது கேட்குமா என்கின்ற கேள்வி எங்களிடம் எழும்புகின்றது.

“உங்களுடைய ஜனநாயக போராட்டத்துக்கு நாங்கள் முழு ஆதரவையும் தந்திருக்கின்றோம். தொடர்ச்சியாக நாங்கள் பெரும்பான்மை இனத்தவர்களோடு வாழ தயாராக இருக்கின்றோம்.

“நாங்கள் தனி நாடு அல்லது இலங்கை ஆட்சி செய்ய வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் கூறவில்லை. இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்கள் சுய உரிமையோடு சுதந்திரமாக வாழ வேண்டும்.



# ஹஜ்ஜுப் பெருநாள் தொழுகை

புனித ஹஜ்ஜுப் பெருநாள் திறந்த வெளியிலான தொழுகை மட்டக்களப்பு மாவட்டத்தின் ஓட்டமாவடி மண்ணு ஸல்வா வளாகத்தில் நேற்று (10) நடைபெற்றது.

பெருநாள் தொழுகையையும் பெருநாள் கொத்பா பேருரையையும் அல் கிம்மா நிறுவனத்தின் பணிப்பாளர் ஹாறூன் ஸஹ்வி நடத்தியதுடன், திறந்த வெளியிலான தொழுகையில் அதிகமான ஆண்களும் பெண்களும் ஈடுபட்டனர்.

(படங்கள் – எம்.எம்.அஹமட் அனாம்)

சட்டவிரோதமாக

# மதுபானம் விற்ற பெண் கைது

கனகராசா சரவணன்



மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிலுள்ள குமாரபுரம் புன்னைச்சோலை பகுதியில் சட்டவிரோத மதுபான விற்பனை நிலையத்தை நேற்று முன்தினம் (09) இரவு முற்றுகையிட்ட பொலிஸார், அதை நடத்தி வந்த 45 வயதுடைய பெண் ஒருவரை கைதுசெய்யதுள்ளனர்.

இதன்போது, கால் போத்தல் கொண்ட மதுபானப் போத்தல்கள் 126 கைப்பற்றப்பட்டதாக, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ். பி. பண்டார தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றுக்கமைய, குறித்த வீட்டை மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸார் முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு மதுபான வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பெண்ணை கைது செய்ததுடன், அவரிடமிருந்து 126 கால் போத்தல் கொண்ட மதுபானப் போத்தல்களை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை, நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இனவாத சுவர்களை உடைத்து

# தன்னெழுச்சி வெற்றியானது

## மக்களின் ஒற்றுமைக்கு கிடைத்த பரிசு

நூருல் ஹுதா உமர்



புதிய நாடொன்றை நோக்கி மக்கள் அலைகடலாக அணிதிரண்டிருப்பது இலங்கை அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல, உலக அரசியலுக்கே ஒரு செய்தியை கூறியிருக்கும் சம்பவமே.

மக்கள் தன் எழுச்சி வெற்றியை நோக்கி நகர்வது மகிழ்ச்சியளிக்கிறது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலான கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஏ.எம். பைறூஸ் தெரிவித்தார்.

நாட்டின் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், தொடர்ந்தும் கூறுகையில்

“நேற்றைய (நேற்று முன்தினம்) சம்பவத்தின் மூலம் பொறுமை காத்து அடங்கியிருக்கும் மக்கள் பொறுமையிழந்து வீதிக்கு இறங்கினால் என்ன நடக்கும் என்பதை மக்களை பலியிட நினைக்கும் எல்லோருக்கும் அறிய வைத்துள்ளது.

“மக்கள் சுதந்திரமாக சுவாசிப்பதற்கும் கூட இன்று வரிசையில் நிற்கவேண்டிய அவலநிலை இலங்கையில் இருக்கிறது.

“ஊழல், அதிகார துஷ்பிரயோகங்கள் காரணமாக சீரழிக்கப்பட்ட வளமிக்க இலங்கை தாய்நாட்டை மீட்க அரசியல்வாதிகளினால் கட்டமைக்கப்பட்ட இனவாத, பிரதேசவாத தடை சுவர்களை உடைத்துக்கொண்டு, இனவாத அரசுக்கு எதிராக கொழும்பு உட்பட முக்கிய இடங்களை முடக்கியிருப்பது இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய வரலாற்று திருப்பமாக உள்ளது.

“இப்பணியை சிறப்பாக முன்னெடுக்க இரவுபகலாக அரசின் பல்வேறு கெடுபிடிகளுக்கு மத்தியிலும், கஷ்டங்களுக்கு மத்தியிலும் இரண்டு மாதங்களுக்கு மேலாக வீதியில் அமர்ந்திருந்து போராடிய நாளைய தலைவர்களான இளைஞர்கள், தாய்நாட்டை நேசித்த இலங்கையர்கள், மதபோதகர்கள், சமூக அமைப்புக்கள், சமூக ஆர்வலர்கள், ஊடக நண்பர்கள் உட்பட அவர்களுக்கு உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கிய அரசியல் பிரமுகர்கள் எல்லோருக்கும் தாய்நாட்டை நேசிக்கும் இலங்கையனாக என்னுடைய நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்” என்றார்.

# பள்ளங்கள், மேடுகளால் உயிர்களுக்கே ஆபத்து

## அச்சத்தில் பயணிகள் புலம்புகின்றனர்

■ பி.கேதீஸ்ம

மலையகத் தோட்டப் வீதிகளில் மிக குறைந்த அளவிலான பஸ்களே சேவையில் ஈடுபடுவதால் தமது உயிருக்குப் பாரிய ஆபத்து ஏற்பட்டுள்ளதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

தனியார் பஸ்களுக்கு டீசல் கிடைக்காததாலும், இ.போ.ச பஸ்களுக்கு டயர் கிடைக்காததாலும் மலையக பகுதிகளில் சேவையில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளன.

இதனால் தங்கள் தேவைகளுக்காகவும், அன்றாடக் கடமைகளுக்காகவும் நகரங்களுக்குச் செல்லும்போதும் வரும்போதும் பஸ்களின் மேற்கூரை, முன் மற்றும் பின்பகுதியில் காணப்படும் பொதிகள் வைக்கும் பகுதிகள் மற்றும் கதவுகளில் தொங்கியபடியும் மிகவும் ஆபத்தான பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தின் சில தோட்ட வீதிகளில் தனியார் மற்றும் இ.போ.ச பஸ்கள் முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் பல வீதிகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பஸ்கள் கால அட்டவணையின்றி இயங்குவதாகவும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.








## உலருணவுப் பொருள்கள்...



நுவரெலியா மாவட்டத்திலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 2,500 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருள்கள் வழங்கும் நடவடிக்கை இலங்கையின் சீன தூதரகம் மற்றும் சீன செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக நேற்று முன்தினம் (9) முன்னெடுக்கப்பட்டது.
இந்நிகழ்வில் இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென்கோன், நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட ஆகியோர் கலந்துகொண்டனர். ரஞ்சித் ராஜபக்ஷ

ஊடக அடக்கு முறைக்கு எதிராக

# அனைவரும் ஒன்று திரள வேண்டும்



ஆர்ப்பாட்டத்தின் போது, செய்தி சேகரித்துக் கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையானது வண்மையாக கண்டிக்கத்தக்கது. இதற்கு எதிராக அனைத்து ஊடகவியலாளர்களும் ஒன்றினைய வேண்டும் என நுவரெலியா மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தேசிய அமைப்பாளர் சுப்பிரமணியம் தியாகு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையை அணிந்து, தம்மை ஊடகவியலாளர்களாக அடையாளப்படுத்தியும் அவர்களைத் தொடர்ந்து தாக்கியுள்ள பொலிஸாரும் இராணுவமும் செய்திருக்கின்ற செயலானது மிகவும் கோழைத்தனமானது.

இதற்கு எதிராக அனைத்து ஊடகவியலாளர்களும் ஒன்று திரண்டு குரல் கொடுக்க வேண்டும் .நாங்கள் அனைவரும் வெவ்வோறு ஊடக நிறுவனங்களில் கடமையாற்றினாலும் ஊடகவியலாளர்களாக ஒன்றினைய வேண்டிய தருணம் இதுவாகும்.

கடந்த காலங்களில் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டு வருகின்றார்கள். இதற்கு எதிராக இதுவரை எந்தவொரு காத்திரமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இனிமேலும் அதனை பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

நாங்களும் எங்களுடைய ஒற்றுமையை இந்த அராஜக கும்பலுக்கு முன் எடுத்துக் காட்ட வேண்டும்.அமைதியை ஏற்படுத்த வேண்டிய பொலிஸார் யாரோ ஒரு சிலருடைய கைக்கூலிகளாக செயற்பட்டு எங்களுடைய ஊடகவியலாளர்களை தாக்குவது எந்த விதத்தில் நியாயமானது என்பது புரியவில்லை.

ஊடகவியலாளர்கள் அனைவரும் குரலற்ற மக்களின் குரலாகவே செயற்படுகின்றார்கள்.



மலையகத்தில் காற்றின் வேகம் அதிகரிப்பு

# மரங்களும் முறிந்து விழுகின்றன

■ எம். குமார், ஆ.ரமேஸ்

கடந்த சில தினங்களாக நுவரெலியா மாவட்டத்திலும் இரத்தினபுரி மாவட்டத்தில் பலத்த காற்று வீசுவதுடன், பாரிய மரங்களில் வீதிகளில் முறிந்து விழுகின்றன.

அதேபோல் பலாங்கொடையிலும் கடந்த ஒரு வாரமாக காற்றின் வேகம் அதிகரித்தே காணப்பட்டது.

இதற்கமைய, பலாங்கொடை- பம்பஹின்ன பகுதியில் நேற்று (10) காலை வீசிய பலத்த காற்றினால், பம்பஹின்ன ரஜவக்க பிரதான வீதியில் முத்தெட்டுவெகம பகுதியில் பாரிய மரம் ஒன்று 33000 voltages மின்சார கம்பம் மீது முறிந்து, வீழ்ந்ததில், அப்பிரதேசத்தில் பல மணி நேரமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

எனினும் பலாங்கொடை மின்சார சபை ஊழியர்கள் சம்பவ இடத்திற்கு சென்று, மரத்தை அகற்றி விட்டு மின்சார துன்டிப்பை வழமைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

இதேவேளை, நுவரெலியா- பதுளை பிரதான வீதியில் நானுஓயா பகுதிக்கு செல்லும் சந்தியில் பாரிய சைபிரஸ் மரமொன்று பாதியாக முறிந்து வீழ்ந்துள்ளது.

இதன் காரணமாக நுவரெலியா நகரில் இருந்து பதுளை,நானுஓயா போன்ற பகுதிக்கு செல்லும் வீதிகளின் ஊடான போக்குவரத்து சில மணித்தியாலங்கள் தடைப்பட்டிருந்தன. எனினும், பாதுகாப்பு படையினர்,மின்சார சபையினர், வன இலாகா பிரிவினர் ,பொலிஸாருடன் பொதுமக்களும் இணைந்து மரத்தை அறுத்து அப்புறப்படுத்தினர்.

யட்டியாந்தோட்டைக்கும்

# தமிழக நிவாரணங்கள் கிடைத்தன

■ என். ஆராச்சி

தமிழக அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் யட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் உள்ளவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

இதற்கமைய, எட்டியாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவுக்கு 1,25,000 கிலோ கிராம் அரிசி கிடைக்கவுள்ளதுடன், அதில் 97,500 கிலோகிராம் இதுவரை கிடைத்துள்ளது என யட்டியாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரியங்கனி பெத்தங்கொட தெரிவித்துள்ளார்.

பிரதேச செயலக அலுவலகத்தின் கண்காணிப்பின் கீழ், 32 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு குறித்த நிவாரணப் பொருள்கள் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



இரட்டைச் சிசுக்களுடன்

# வீதியில் தத்தளித்த பெற்றோர் கைகொடுத்த பொலிஸார்

■ உவெந்திர பிரியங்கர



வைத்தியசாலையில் இரட்டை சிசுக்களைப் பிரசவித்த தாயொருவரை, அவ்விரு சிசுகளுடன் வீட்டுக்கு அழைத்துச் செல்வதற்கான வாகன வசதி இன்மையால் நடு வீதியில் குழந்தைகளுடன் நின்ற சம்பவம் கலவான பகுதியில் நேற்றுமுன்தினம் (9) பதிவாகியது.

இதன்போது கலவான பொலிஸ் நிலைய அதிகாரி ஒருவர் ,தனது பிரத்தியேக லொறி மூலம் தாயையும் சிசுக்களையும் வீட்டிற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்திருந்தார்.

புதிதாக பிறந்த இரட்டை சிசுக்களுடன் தாயும் தந்தையும் பல மணிநேரம் வெயிலில் பஸ்ஸுக்காக காத்திருந்த நிலையிலேயே, கலவான பொலிஸ் அதிகாரி இந்த மனிதாபிமான உதவியைச் செய்துள்ளனர்.

முடங்கிய போக்குவரத்து சேவைகள்

# வழமைக்குத் திரும்பின

■ மலைவாஞ்ஞன்



கொழும்பு மற்றும் நாடாளவிய ரீதியில் நடைபெறும் “கோட்டா கோ கம” ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, மலையகத்தில் நேற்றுமுன்தினம் (9) முடங்கிய பொது போக்குவரத்து சேவைகள், நேற்று (10) வழமைக்கு திரும்பியுள்ளன.

ஹட்டன் பகுதியிலிருந்து ஜூலை 9 ஆம் திகதியன்று, இலங்கை போக்குவரத்து சேவைக்கு சொந்தமான பஸ்களோ தனியார் பஸ்களோ சேவையில் ஈடுபடவில்லை.

எனினும் இ.போ.ச மற்றும் தனியார் பஸ்களும் நேற்றையதினம் (10) மட்டுப்படுத்தப்பட்ட சேவையில் ஈடுபட்டிருந்தன.

இதேவேளை, ஹட்டனிலிருந்து தூர பிரதேசங்களும் மிகவும் குறைந்தளவில் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையால் பயணிகள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

மேலும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த மலையகப்பகுதில் மூடப்பட்ட கடைகளை வழமைப்போல் நேற்று (10) திறந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமையும் காணக்கூடியதாக இருந்தன.

# காணி பிரச்சினையால் மூவர் படுகாயம்

பதுளை, மீகஹாகிவுல எல்லந்த பிரதேசத்தில் இடம்பெற்ற காணிப்பிரச்சினையால் ஏற்பட்ட கைகலப்பில் பெண்ணொருவர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

இவர்கள், ரோபேறி தென்ன மற்றும் மீகஹாகிவுல ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கந்தகெட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

25 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்டவர்களே இவ்வாறு அனுமதிக்கப்பட்டுள்ளனர். நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்படும் காணி தொடர்பில் ஏற்பட்ட கைகலப்பிலேயே இந்த மூவரும் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

■ மெய்யன்

கண்டி மாவட்ட பன்விலை றாகூஷாவ தோட்டம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகப் பெருவிழா விநாயகர் வழிபாட்டோடு இன்று(11) ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து கணபதி ஹோமம் நவக்கிரக,ஹோமம் என்பன இடம்பெற்று சுவாமிகளின் பட்டிடினப்பிரவேசம் இடம்பெறும். அன்றைய தினம் கண்திறத்தல் நிகழ்வோடு அடியவர்களுக்கு விபூதிப் பிரசாதமும் வழங்கப்படும்.

நாளை(12) காலை 8.00 மணிக்கு புண்யாஹவாசனம்,விசேட ஹோமம் என்பன நடைபெற்று எண்ணெய்க்காப்பு செலுத்துதல் நிகழ்வு இடம்பெறவுள்ளதுடன், புதன்கிழமை (13) மஹா கும்பாபிஷேகத்துடன், பிரதான கலச அபிஷேகம் நடைபெற்று, திருக்கதவு திறத்தல், மஹா அபிஷேகம் தீபாராதனை நடைபெற்று மகேஸ்வர பூசையோடு அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

மஹா கும்பாபிஷேகத்தினைத் தொடர்ந்து 12 நாட்களுக்கு மண்டலாபிஷேகமும் நடைபெறும்.25.07.2022 திங்கட்கிழமை மண்டலாபிஷேக பூர்த்தியன்று காலை அஷ்டோத்திர சத (108) சங்காபிஷேகம் இடம்பெறும்.

கும்பாபிஷேக நிகழ்வினை சாதக சிரோண்மணி சத்யோதஜாத சிவாச்சாரியார் சிவஸ்ரீ தெ.கு.ஜனேந்திரராஜா குருக்கள் நிகழ்த்தி வைக்கவுள்ளார்.

குற்றத்தை மறைக்கவே

# ஊடகவியலாளர் மீது தாக்குதல்

## என்கிறார் இராதா எம்.பி

■ ஷங்கீதன்



கொழும்பில் ஜூலை 9 ஆம் திகதியன்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது, ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமை மிகவும் கண்டிக்கத்தக்கதும் மிலேச்சத்தனமானதும் ஆகுமென மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

“இந்த தாக்குதல்கள் தகவல்களை தெரிந்து கொள்வதை தடுத்து நிறுத்துவதுமான ஒரு செயலாகும்” என்றும் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று (10) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

ஊடகவியலாளர்கள் என்பவர்கள் நடக்கின்ற சம்பவங்களை இந்த நாட்டுக்கும் சர்வதேசத்திற்கும் கொண்டு செல்கின்ற பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்றுகின்றவர்கள்.

அவர்களுடைய கடமைக்கு இடையூறு ஏற்படுத்துகின்றவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்க வேண்டும். ஏனெனில் ஊடகவியலாளர்களை தாக்குவது என்பது தாக்கல் செய்கின்ற தவறுகள் வெளியில் தெரிந்துவிடும் அல்லது சர்வதேசத்தில் இந்த நாட்டிற்கு அவப்பெயர் வந்துவிடும் என்ற காரணத்தினாலேயே அவர்கள் தாக்கப்படுகின்றார்கள்.

ஆனால், கடமையில் இருக்கின்ற பொலிஸாரும் இராணுவத்தினரும் தங்களுடைய கடமைகைளை சரியாக செய்தால் யாருக்கும் எந்த பிரச்சினையும் ஏற்படாது.

அவர்கள் தங்களுடைய கடமைகளை மறந்து சட்டத்தை கையில் எடுக்கின்ற போதே, தேவையற்ற பிரச்சினைகள் உருவாகின்றன.

இலங்கையில் ராஜபக்ஷர்கள்ள் என்று ஆட்சிக்கு வந்தாலும் ஊடகவியலார்களுக்கு பாதுகாப்பு இல்லாத ஒரு நிலையே காணப்படுகின்றது.

எனவே, தற்பொழுது பாதிக்கப்பட்டுள்ள ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.வெறுமனே கண்துடைப்புக்காக பதவி நீக்கம் செய்வதோ இடமாற்றம் வழங்குவதோ சரியான தீர்வாக அமையாது.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய அனைவரும் இனம் காணப்பட்டு அவர்களுக்கு உரிய தண்டனையை நீதிமன்றம் ஊடாக வழங்க வேண்டும். அதற்காக சட்டத்தரணிகள் அனைவரும் முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# ஜூலை 9 உம் கற்கவேண்டிய வலிநிறைந்த பாடங்களும்

இலங்கையை பொறுத்தவரையில் கறைபடிந்த நாட்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. 2022 ஆம் ஆண்டில், இலங்கை வரலாற்றில் பேசப்பட்ட பல சம்பவங்கள் பசுமரத்தில் ஆணி அடித்தாற் போல் பதிவாகியுள்ளன.

“மைனா கோ கம”, “கோட்டா கோ கம” ஆகியவற்றின் மீது மே 09 ஆம் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் மற்றும் அதன்பின்னர் நாடளாவிய ரீதியிலுள்ள மக்கள் பிரதிநிதிகளின் சொத்துக்களுக்கு தீ வைத்தமை கறைபடிந்த வரலாற்றுக்குள் சேர்ந்தது.

“கொழும்புக்குள் நாடு” எனும் தொனிப்பொருளில் ஜூலை 09 ஆம் திகதியன்று நடத்தப்பட்டது வரலாற்று முக்கியதுவமிக்க போராட்டமாகும். அப்போராட்டத்தை முடக்குவதற்கு அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் யாவுமே தோல்வியடைந்தன.

கரும்புலிகள் வாரத்தில், வடக்கு, கிழக்கில் குண்டுகள் வெடிக்கப்படலாமென வெளிநாட்டு புலனாய்வு சேவைகளை ஆதாரமாகக் குறிப்பிட்டு, பகிரப்பட்ட கடிதத்தில் குறிப்பிட்டிருந்த விடயங்களும் பொய்த்துவிட்டன. இதனிடையே இறுதி அஸ்திரமாக பிறப்பிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டமும் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டது.

மக்கள் எழுச்சிக்கு மேல் எதுவுமே இல்லை என்பதை ஆட்சியாளர்களுக்கு கற்பிக்கும் வகையில், ஜூலை 09 போராட்டம் வரலாற்றில் இடம்பிடித்துக்கொண்டது. எனினும், ஜனாதிபதி செயலகம் மற்றும் ஜனாதிபதி மாளிகைகளை கைப்பற்றியிருக்கும் போராட்டக்காரர்கள், அவற்றுக்குள் இருந்து செய்யும் ஒருசில அட்டகாசமான செயல்கள் கறைபடிந்த வரலாற்றுக்குள் இணைந்துவிடும்.

ஒரு நாணயத்துக்கு இரண்டு பக்கங்கள் இருப்பதைப் போல, “மே 09 எழுச்சி”யும் இரண்டு பக்கங்களை சமப்படுத்திவிட்டது. மக்கள் எழுச்சியே அரசாங்கத்தை மண்டியிடச் செய்தது என்பதற்கு மாற்றுக்கருத்து இடம்இல்லை. ஆனால், பொதுச்சொத்துக்களுள் இருந்து செய்வதை உலகமே கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஜூலை 9 இன் ஊடாகக் கற்கவேண்டிய வலிநிறைந்த பாடங்கள் உள்ளன. இது இன்றுடன் முடிந்துவிடும் காரியமல்ல. நாளை, எதிர்காலம் உள்ளிட்டவற்றை பற்றியும் சிந்திக்கவேண்டும். “மே 9 எழுச்சிக்கு” கிடைத்த முதல்வெற்றியாகும். முழுமையான வெற்றியை அடையவேண்டுமாயின், இன்னும் பயணிக்கவேண்டும் என்பதை நினைவில் கொள்க.

காலக்கெடு விதித்து கூறியிருப்பதைப் போல ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஜூலை 13ஆம் திகதியன்று இராஜினாமா செய்து, பதில் ஜனாதிபதி நியமிக்கப்படுவாராயின். ஜனாதிபதி செயலகத்துக்கும், ஜனாதிபதி மாளிகைகக்கும் அவர், செல்லவே வேண்டும். ஆக புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கவேண்டும்.

அதற்கான செலவுகள் யாவும் மக்களின் வரிப்பணத்தில் இருந்து செல்லும். ஆக, மக்களின் மீதான சுமைகள் மெம்மேலும் கூடிக்கொண்டே போகும். ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள், தங்களுடைய காலம் நிறைவடைந்ததன் பின்னர், பொதுச் சொத்துக்களுக்கு சொந்தம் கொண்டாடவே முடியாது.

இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசின் சொத்துக்களாகும் என்பதை நினைவில் கொள்வதே, எதிர்கால சிந்தனையாகும் என்பதுடன், எதிர்காலத்தில் ஆட்சிபீடமேறுபவர்கள், தவறு செய்யக்கூடாது என்பதை ஜூலை 9 நினைவூட்டி நிற்கிறது.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சகல உயிர்களையும் சமனாக மதித்து, எந்தவித எதிர்பார்ப்புகளுமற்ற பரோபகார சிந்தனையுடன் மனம், வாக்கு, தேகத்தால் தீங்கு வளைவிக்காதவராய் மாறாத, திட நோக்குடன் இருப்பதே தவத்தின் வடிவமாகும்.

குறித்தவோர் ஆற்றலை வளர்ப்பதற்காக மன ஒடுக்கம் அத்தியாவசியமாகின்றது. புலனடக்கத்தைத் தூய சிந்தனை உண்டாக்குகின்றது.

இந்தப் புலனடக்கத்தை உருவாக்குகின்ற வலுமிக்க ஆற்றலை, “தவம்” ஏற்படுத்த ஏதுவாகின்றது. தவக் கோலத்தில் இருந்தால் மட்டுமே, இறைவன் கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதில்லை.

சாதாரண நிலையிலுள்ள எந்த மனிதரும், தம் நல்ல இயல்புகள் மூலம் எல்லோரையும் போல, படைத்த கடவுளால் ஆசிர்வதிக்கப்படுகின்றார். இறைவனுக்கு எல்லோரும் சமம்.

–பருத்தியூர் பாலவயிரவநாதன்

# பதவிவிலகுகிறார் கோட்டா?



என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபய, எதிர்வரும் 13ம் திகதி, புதன் கிழமை, எசல பௌர்ணமி தினத்தன்று, விலகுவதாக சபாநாயகருக்கு தெரிவித்திருப்பதாக செய்தியறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

2022 ஜூலை 9ம் திகதி நடந்த பெரும் ஆர்ப்பாட்டத்தையடுத்து, ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை ஆகியவற்றினுள் நுழைந்து அவற்றைக் கைப்பற்றிய நிலையில், பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் தனிப்பட்ட வீட்டிற்கு தீவைத்து எரித்தழித்த பின்புலத்தில், இந்த அறிவிப்புச் செய்தி வந்திருக்கிறது.

இப்படி ஒரு செய்தி வந்துவிட்ட பின்னர் “பதவிவிலகுறார் கோட்டா” என்பதற்கு பிறகு கேள்விக்குறிக்கான தேவை என்ன என்று கேள்வி எழலாம். ஜனாதிபதி பதவி விலகல் கடிதத்தில் கையெழுத்திட்டு அதனை சபாநாயகருக்கு அனுப்பி வைத்து, அது சபாநாயகருக்கு கிடைக்கும் வரை, பதவி விலகல் என்பது ஒரு செய்தி மட்டுமே. அதன் நிச்சயத்தன்மைக்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

ஜனாதிபதி பதவி விலகாவிட்டால் அடுத்தது என்ன என்பது பெருங்கேள்வி. சட்டரீதியாக ஜனாதிபதியை பதவி விலகச் செய்ய ஒரு வழிதான் இருக்கிறது. அது பழிமாட்டறைதல் (impeachment). ஆனால் அது ஒரு நீண்ட காலந்தேவைப்படும் செயற்பாடு. முதலில் ஜனாதிபதி அரசியலமைப்பு குறிப்பிடும் பழிமாட்டறைதலுக்கான குற்றமொன்றைப் புரிந்தார் பிரேரணை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றப்பட வேண்டும்.

அதற்குப் பின்னர் உயர் நீதிமன்றம் குறித்த குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தி, குறித்த ஜனாதிபதி குறித்த குற்றங்களைப் புரிந்தார் என்று தீர்மானிக்க வேண்டும். அந்தத் தீர்மானத்தின் படி, பாராளுமன்றம் மீண்டும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு பழிமாட்டறைதல் தீர்மானத்தை நிறைவேற்றினால் மட்டுமே ஜனாதிபதி பதவி நீக்கப்படுவார்! பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றை நிறைவேற்றுவதனூடாக ஜனாதிபதியை பதவி நீக்க முடியாது. அத்தகைய ஏற்பாடுகள் அரசியலமைப்பில் இல்லாததற்குக் காரணம், ஜனாதிபதி என்பவர், இங்கு பாராளுமன்றத்தால் நியமிக்கப்படும் ஒருவர் அல்ல. மாறாக அவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

ஜனாதிபதிக்கென தனித்த மக்களாணையொன்றை ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வழங்குகிறார்கள். ஆகவே பாராளுமன்றம் அந்த மக்களாணையை இலகுவில் மீறக்கூடியதாக கட்டமைப்பு அமையக்கூடாது என்பதனால்தான் அரசியலமைப்பு இவ்வாறு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மக்களால் ஜனாதிபதித் தேர்தலில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதியை பதவி விலக்குவது என்பது, இலங்கையின் அரசியலமைப்பு ஏற்பாடுகளின் கீழ், அவ்வளவு இலகுவான காரியமல்ல.

ஆகவேதான் மக்கள் நேரடியாக வீதிக்கிறங்கி கோட்டாவை பதவி விலகுமாறு அழுத்தங்கொடுத்துப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். சட்டரீதியாக செய்ய முடியாததை, சட்டத்தைத் தாண்டி அரசியல் ரீதியாக சாதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இலங்கை மக்கள் இருக்கிறார்கள். ஆனால், இது அனைத்தையும் மீறியும் கோட்டா பதவி விலகாவிட்டால் என்ன நடக்கும் என்ற கேள்விக்கான நிச்சயமான பதவிலை எவரால் சொல்ல முடியாது.

மறுபுறத்தில் ஜனாதிபதி கோட்டா பதவி விலகிவிட்டால், அடுத்தது என்ன என்ற கேள்வியும் இங்கு முக்கியமானது. ஜனாதிபதிப் பதவி, அவரது பதவிக்காலத்தின் போது, பதவிவிலகல் அல்லது வேறு காரணங்களினால் வெற்றிடமாகும் போது, இலங்கை அரசியலமைப்பின் படி உடனடியாக பிரதமர் பதில் ஜனாதிபதியாவார். பிரதமர் பதவி வெற்றிடமாக இருந்தால், சபாநாயகர் பதில் ஜனாதிபதியாவார். ஜனாதிபதிபதவி வெற்றிடமாகிய முப்பது நாட்களுக்குள் பாராளுமன்றமானது, ஜனாதிபதியாவதற்கான தகுதிகள் என்று அரசியலமைப்புரைக்கு தகுதிகளைக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை, வெற்றிடமாகிய ஜனாதிபதிப்பதவியின் எஞ்சிய பதவிக்காலத்திற்கு ஜனாதிபதியாக தேர்ந்தெடுப்பார்கள்.

இதற்கு முன்பதாக, ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அகால மரணமடைந்தபோது, அப்போது பிரதமராக இருந்த டிங்கிரி பண்டா விஜேதுங்க பாராளுமன்றத்தினால், ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் எஞ்சிய பதவிக்காலத்திற்கு ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமையை ஓர் உதாரணமாகக் குறிப்பிடலாம்.

மேலும், தற்போது அனைத்துக் கட்சி அரசாங்கம் ஒன்றை அமைப்பது பற்றியும் நிறைய குறிப்பிடப்படுகின்றன. அனைத்துக்கட்சி அரசாங்கம் ஒன்று அமைய வேண்டுமானால், அதில் பிரதமர் யார், அமைச்சர்கள் எவரெவர் என்பது முக்கிய கேள்வி. அரசாங்கம் ஒன்று இயங்க வேண்டுமானால், அதற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் என்பது அவசியம். ஆகவே பாராளுமன்றத்தில் அந்த பெரும்பான்மையின் ஆதரவைப் பெறக்கூடியவர்கள் யார் இருக்கிறார்கள் என்பது மிக முக்கியமான கேள்வி.

இந்த இடத்தில்தான் பெரும் சிக்கல் ஒன்று உருவாகிறது. இன்று ஆர்ப்பாட்டக்களத்தில் முன் நிற்கும் எதிர்க்கட்சிகள் எதற்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இதுவரை கிடையாது. ஆகவே, கோட்டா பதவி விலகினால், எஞ்சிய பதவிக்காலத்திற்கான ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கும், இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அவசியம். இதில், இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் ராஜபக்ஷர்களின் கட்சியான ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முடிவு என்பது தீர்மானம்மிக்கதாக அமையும் என்பது கவனிக்கப்பட வேண்டியது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றால் கூட, இன்றைய நிலையில் பாராளுமன்றமானது அதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய நிலை இருக்கிறது. அதற்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை அவசியம்.

ஆகவே, இன்று ஆர்ப்பாட்டக்களத்தில் முன்னிலை வகிக்கும் எதிர்க்கட்சிகளுக்கு முன்னுள்ள பெரும் சவால், பாராளுமன்றத்தில் தமக்கான பெரும்பான்மையை எப்படித் திரட்டிக்கொள்வது என்பதுதான். பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாது, அரசாங்கமொன்றை அமைக்க முடியாது, கோட்டா பதவி விலகினால் எஞ்சியுள்ள பதவிக்காலத்திற்கான ஜனாதிபதியை தேர்தெடுக்க முடியாது, பொதத் தேர்தல் நடத்துவதற்கான தீர்மானத்தைக் கூட நிறைவேற்றமுடியாது. நாடு அரசியல் ஸ்திரத்தன்மையின்றி தத்தளிக்கும். இதுதான் அடுத்த பெரும் சவால்.

இந்த நிலையில், எதிர்க்கட்சிகளுக்கு இருக்கக் கூடிய ஒரு நம்பிக்கை, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து கணிசமானவர்கள் பிரிந்து வருவார்கள் என்பதுதான். ஒரு கப்பல் கவிழும்போது, அதிலிருந்து தப்பித்தோ வெளியே பாய்ந்து தப்பிக்கும் எலிகளைப் போல, மூழ்கும் ராஜபக்ஷ கப்பலிலிருந்து பாய்ந்து தப்பிக்கும் எலிகளாக பலர் கட்சிமாறுவார்கள், தம்மை “சுயாதீனர்களாக” அறிவித்துக்கொண்டு, இடைக்கால சர்வ கட்சி அரசாங்கத்திற்கும், அதன் முடிவுகளுக்கும் ஆதரவு தருவார்கள் என்பதுதான் எதிர்க்கட்சிகளுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை.

ஆனால் இத்தோடு சிக்கல் தீராது. இங்கு எதிர்க்கட்சிகள் என்பது பல. அவற்றில் கொள்கைகள், நோக்கங்கள், முன்னுரிமைகள் மாறுபட்டவை. ஆகவே கோட்டா பதவி விலகினால் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு யாரை தேர்ந்தெடுப்பது என்பதே சிச்கலானதொரு கேள்வியாக அமையலாம். இங்கு ஜனாதிபதியாக வேண்டும் என்ற ஆசை யாருக்குத்தான் இல்லை என்று யோசிப்பது ஒருபுறமிருக்க, நாடு மிகமோசமான பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்துள்ள இந்த சந்தர்ப்பத்தில் யார் ஜனாதிபதியாகும் சவாலை ஏற்கப் போகிறார்கள் என்பது யோசிக்க வேண்டியதொரு விஷயம்.

எல்லா விடயங்களையும் கருத்திற்கொண்டு பார்க்கையில், இந்த சிக்கலுக்கான தீர்வுப் புள்ளி, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதில்தான் தங்கியுள்ளது. அத்தகைய அரசியலமைப்பு திருத்தத்திற்கு சர்வசன வாக்கெடுப்பில் அங்கிகாரமொன்று பெறப்படவேண்டுமானால், அதனைப் பெற்றுக்கொள்வதற்கு இதனைவிடப் பொருத்தமானதொரு சந்தர்ப்ப சூழல் உருவாகாது.

ஆகவே இது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதுடன், நாட்டின் அரசியலமைப்பை மாற்றியமைப்பதற்கான அரிய சந்தர்ப்பமாகக் கருதப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறையை இல்லாதொழித்தல், அரசியலமைப்பிற்கான அடிப்படைத் திருத்தங்கள் பலவற்றைச் செய்ய சர்வசன வாக்கெடுப்பில் மக்கள் அங்கிகாரம் தேவை என்று பாதுகாப்பு முட்டுக்கட்டையாக இருந்தது.

இன்று அதனைச் செய்யக் கூடிய யதார்த்த சூழல் உருவாகியிருக்கிறது. ஆனால் அதனைச் செய்வதற்கு மக்கள் பிரதிநிதிகளாகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாராக இருக்கிறார்களா என்பது முக்கிய கேள்வி. இதனை அவர்கள் செய்யாவிட்டால், சர்வ கட்சி அரசாங்கம் என ஆட்சியலமர்ந்தாலும், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை எப்படி ஏற்படுத்தப்போகிறார்கள் என்பதை அவர்கள்தான் மக்களுக்கு விளக்க வேண்டும். நாடு அரசற்ற அராஜகத்திற்கு (anarchy) முற்றாக மூழ்குவதற்கு முன்னதாக நாட்டைக் காப்பாற்றாவிட்டால், இலங்கையின் எதிர்காலம் என்பது கேள்விக்குறியே.

## கடிதங்கள்

### சுத்திகரிப்பு இல்லை

நாட்டின் பல்வேறான இடங்களிலும் சுத்தமான குடிநீர் வசதிகள் இல்லை. பெருந்தோட்டப்புறங்களில் அதன் நிலமையை விவரிக்கவே முடியாது. மனித மற்றும் பிராணிகளின் கழிவுகள் குடிநீரில் கலந்துவிடுகின்றன. அசுத்தமான மற்றும் சுத்திகரிக்கப்படாத நீரையே அருந்தவேண்டிய நிலை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இதனால் அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தாம் பருகும் குடிநீர் தொடர்பில் கடும் கவலை தெரிவித்துள்ளனர். இவ்வாறான அசுத்தமான நீரை பருகுவதனால், தாங்கள் பல்வேறான நோய்த்தாக்கங்களுக்கு உள்ளாகுவதாகவும் தெரிவித்துள்ளனர். ஆகையால் அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த அதிகாரிகள், அவசரமான தீர்மானங்களை எடுத்து, மக்களுக்கு சுத்தமான குடிநீரை பெற்றுக்கொடுக்க வழிசமைக்கவேண்டும்.

சில பிரதேசங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட குடிநீரின் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்திய போது, அதில், ஈகொலய் பக்றீரியா கலந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது மனித மலம் மற்றும் பிராணிகளின் கழிவுகளில் இருந்து பிரிந்துவரக்கூடியதென அறியமுடிகின்றது.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் மருந்து தட்டுப்பாடுகள், போக்குவரத்து நெருக்கடிகள் உள்ளிட்ட காரணங்களால் பெரும் அச்சத்தில் மக்கள் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், சுத்தமில்லாத குடிநீரை பருகுவதன் ஊடாக, நோய்வாய்ப்பட்டுக்கொண்டால், வைத்தியசாலைக்கும் உடனடியாக செல்லமுடியாது. அத்துடன், மரணிக்க வேண்டிய நிலைமையே காணப்படுகின்றது என்றும் அந்தந்த பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

சென்னை

# ‘ஜெயலலிதாவின் அண்ணன் நான்’

## சொத்தில் பங்கு கோரி முதியவர் வழக்கு

ஜெயலலிதாவின் சொத்துகளில் தனக்கு 50 சதவீதம் தர வேண்டுமென முதியவர் ஒருவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

கர்நாடகாவை சேர்ந்த முதியவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். தன்னை ஜெயலலிதாவின் சகோதரர் என்றும் மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கடந்த 2016ம் ஆண்டு டிசெம்பர் 5ம் திகதி உயிரிழந்தார்.

இதையடுத்து ஜெயலலிதாவின் சொத்துக்களுக்கு அவரது அண்ணன் ஜெயக்குமாரின் வாரிசுகளான ஜெ.தீபா, தீபக் ஆகியோரே வாரிசு என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்நிலையில், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதாவை தனது சகோதரி எனக் கூறி கர்நாடக மாநிலம் வியாசராபுரத்தை சேர்ந்த 83 வயதான வாசுதேவன் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அதில், ஜெயலலிதாவின் தந்தை ஜெயராமின் முதல் மனைவிக்கு தான் பிறந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது தந்தை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்ட வேதவள்ளி மூலம் பிறந்த ஜெயக்குமாரும், ஜெயலலிதாவும் தனது சகோதரர், சகோதரி எனவும் உரிமை கோரியுள்ளார்.



ஜீவனாம்சம் கேட்டு மைசூர் நீதிமன்றத்தில் தனது தாய் ஜெயம்மா தொடர்ந்த வழக்கில், வேதவல்லி, ஜெயக்குமார், ஜெயலலிதா ஆகியோர் எதிர்மனுதாரர்களாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்

எனவே, ஜெயலலிதாவின் சொத்துகளில் தனக்கு 50 சதவீதம் தர வேண்டுமென தீபா, தீபக் ஆகியோர் மட்டுமே ஜெயலலிதாவின் வாரிசுகளென சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பில் திருத்தம் செய்ய வேண்டும் என்றும் வாசுதேவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த மனு உயர்நீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.



# மசாஜ் சேவை

மஹாராஷ்டிரா மாநிலம் பந்தர்பூரில் உள்ள பாண்டுரங்க விட்டலர் கோயிலுக்கு 250 கிலோமீற்றர் தூரம் பாத யாத்திரையாக வந்த பக்தர்களுக்கு, நகரவாசிகள் வழியில் மசாஜ் செய்து சேவை செய்தனர். (மும்பை)

சென்னை

# இபிஎஸ்ஸுக்கு 2,452 பேர் ஆதரவு



சென்னை வானகரத்தில் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்துக்கான (அ.தி.மு.க) பொதுக்குழு கூட்டத்துக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதற்கிடையில், எடப்பாடி பழனிசாமிக்கு (இபிஎஸ்) ஆதரவு தெரிவித்துள்ள பொதுக்குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை 2,452 ஆக உயர்ந்துள்ளது.

ஓ. பன்னீர்செல்வத்தின் (ஓபிஎஸ்) சொந்த மாவட்டமான தேனியிலேயே அவரது ஆதரவு உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைந்துள்ளது.

அ.தி.மு.க.,வில் ஒற்றைத் தலைமை விவகாரம் தீவிரம் அடைந்துள்ள நிலையில், இ.பி.எஸ். தரப்பு திட்டமிட்டபடி பொதுக்குழு இன்று (11) நடத்த அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இந்த பொதுக்குழு கூட்டத்தில், அதிமுகவில் உள்ள ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் ஆகிய பதவிகளை இரத்து செய்வது, பழையபடி கட்சியின் அடிப்படை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பொதுச் செயலாளர் பதவியை உருவாக்குவது, அதுவரை தற்காலிக பொதுச் செயலாளரை நியமிப்பது, பொதுச் செயலாளர் தேர்தலை அறிவிக்கை செய்வது உள்ளிட்ட 16 தீர்மானங்களை நிறைவேற்ற திட்டமிட்டுள்ளனர்.

இதற்கிடையே, தமிழகம் முழுவதும் அ.தி.மு.க., பொதுக்குழு உறுப்பினர்கள் மத்தியில் ஓபிஎஸ்ஸுக்கு ஆதரவு படிப்படியாக குறைந்து வருவதாக கூறப்படுகிறது.




வாகா

# வாகா எல்லையில் இனிப்பு பரிமாற்றம்

இறைவனின் தூதரான இப்ராஹிம் நபிகளாரின் தியாகத்தை நினைவு கூறும் வகையில் இஸ்லாமியர்களின் முக்கிய பண்டிகையான பக்ரீத் பண்டிகை நேற்று (100 கொண்டாடப்பட்டது.

இதையொட்டி மசூதிகளில் சிறப்பு தொழுகைகள் அதிகாலையிலேயே நடைபெற்றன. பக்ரீத் பண்டிகையையொட்டி பல்வேறு அரசியல் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், பக்ரீத் பண்டிகை கொண்டாடப்பட்டு வரும் நிலையில், பஞ்சாப் மாநிலம் அட்டாரி - வாகா எல்லையில், இந்தியா- பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் இனிப்புகளை பரிமாறி கொண்டு தங்களது வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டனர்.

மும்பை

# 5 ஆண்டுகளில் பெட்ரோல் காணாமல் போய்விடும்



5 ஆண்டுகளில் நாட்டில் பெட்ரோல் காணாமல் போய்விடுமென மத்திய மந்திரி நிதின் கட்கரி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பெட்ரோல் காணாமல் போய்விடும் மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை துறை மந்திரி நிதின் கட்கரி மராட்டிய மாநிலம் அகோலாவில் உள்ள டாக்டர் பன்ஜப்ராவ் கிரிஷி கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டார்.

அவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது. விழாவில் மத்திய மந்திரி நிதின் கட்கரி பேசியதாவது:-

முழு நம்பிக்கையுடன் கூற விரும்புகிறேன், இன்னும் 5 ஆண்டுகளில் பெட்ரோல் நாட்டில் இருந்து காணாமல் போய்விடும். உங்கள் ஸ்கூட்டர் அல்லது கார்கள் பசுமை ஹைட்ரஜன், எத்தனால், சி.என்.ஜி. அல்லது எல்.என்.ஜி. போன்ற பசுமை எரிபொருளில் தான் இயக்கப்படும்.

விவசாயிகளுக்கு பயிற்சி வேளாண் துறையில் அடுத்த 5 ஆண்டுகளில் 12 முதல் 20 சதவீதம் வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் உழைக்குமாறு வேளாண்மை ஆராய்ச்சியாளர்கள், நிபுணர்களை கேட்டு கொள்கிறேன்.

திரிபுரா

## இரு மகள்களுடன் பரீட்சை எழுதி

# தேர்ச்சி பெற்று அசத்திய தாய்

திரிபுராவில் தாயொருவர் தனது இரு மகள்களுடன் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதி அதில் தேர்ச்சி பெற்று அசத்தியுள்ளார்.

கற்பதற்கு வயது தடையில்லை. ஆர்வம் கொண்டவர்கள் எப்போது வேண்டுமானாலும் கற்கலாம் என்பதற்கு உதாரணமாக விளங்குபவர் திரிபுராவைச் சேர்ந்த ஷிலா ராணி தாஸ்.

அம்மாநிலத்தின் அகர்தலா பகுதியைச் சேர்ந்த இவருக்கு ராஜஸ்ரீ, ஜெயஸ்ரீ என இரு மகள்கள் உள்ளனர். முதல் மகள் ராஜஸ்ரீக்கு திருமணம் ஆகி ஏழு வயது மகன் உள்ளார்.



இரண்டாவது மகள் ஜெயஸ்ரீ 12ஆம் வகுப்பு படித்து வருகிறார். இந்நிலையில், கொவிட் முடக்கம் நேரத்தில் முதல் மகள் ராஜஸ்ரீ மற்றும் தாயார் ஷிலா ராணிக்கு படிப்பின் மீது ஆர்வம் துளிர்விட்டுள்ளது.

இளையவர் ஜெயஸ்ரீ 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுக்கு தயாராவதை பார்த்ததும், அவரது அக்கா ராஜஸ்ரீ தானும் 12ஆம் வகுப்பு தேர்வை எழுதலாம் என முடிவெடுத்து தேர்வுக்கு விண்ணப்பித்து தயாராகியுள்ளார்.

இதற்கெல்லாம் ஒரு படி மேலே, இருவரின் தாயாரான ஷிலா ராணி தான் 10ஆம் வகுப்பு படித்து தேர்ச்சி பெற வேண்டும் என்று அதிரடி முடிவெடுத்து அவரும் தேர்வுக்கு விண்ணப்பித்து தன்னை தயார் செய்துள்ளார்.

இதைத் தொடர்ந்து தாய், அவரது இரு மகள்கள் ஆகிய மூவரும் பொதுத் தேர்வு எழுதிய நிலையில், மூவரும் அதில் வெற்றிகரமாக தேர்ச்சியும் பெற்றுள்ளனர்.

## யூனியன் அஷ்யூரன்ஸ் பாங்கசூரன்ஸ்

# விருதுகள் வழங்கும் நிகழ்வு

2021 வருடாந்த பாங்கசூரன்ஸ் விருதுகள் வழங்கும் நிகழ்வில் சிறப்பாக செயலாற்றியிருந்தவர்களுக்கு யூனியன் அஷ்யூரன்ஸ் விருதுகள் வழங்கி கௌரவித்திருந்தது. இந்த நிகழ்வுக்கு “முதல் வகுப்பு சிறப்பு” என தலைப்பிடப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர்/யூனியன் அஷ்யூரன்ஸ் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர் சுரேஷ் ராஜேந்திரா மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2021 ஆம் ஆண்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் சிறப்பாக செயலாற்றியிருந்ததுடன், இலங்கையின் முதல் தர பாங்கசூரன்ஸ் சேவை வழங்குநராகவும் தெரிவாகியிருந்தது. ரூ. 1 பில்லியனுக்கு அதிகமான ANBP பெறுமதியையும், 618 க்கு அதிகமான வங்கிக் கிளைகளை ஏழுக்கு அதிகமான முன்னணி வங்கி பங்காளர்களையும் தம் வசம் கொண்டிருந்தது. இலங்கையர்களின் கனவுகளுக்கு வலுவூட்டுவது எனும் நிறுவனத்தின் உறுதி மொழிக்கு மேலும் பக்கபலமாக இது அமைந்திருந்தது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், “பாங்கசூரன்ஸ் பிரிவில் சிறந்த சாதனையாளர்களுக்கு வாழ்த்துகள். சவால்கள் நிறைந்த ஆண்டிலும் பாங்கசூரன்ஸ் பிரிவைச் சேர்ந்தவர்கள் சிறப்பாக செயலாற்றியிருந்ததை நான் அவதானித்தேன். புத்தாக்கமான தீர்வுகள், சேவைச் சிறப்பு மற்றும் டிஜிட்டல் சௌகரியம் போன்றவற்றினூடாக துறையில் முன்னோடிகளாக அமைந்திருந்தனர். இவர்களின் சிறப்பான செயற்பாட்டினூடாக,




நாட்டின் பாங்கசூரன்ஸ் துறையில் புதிய யுகம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், பாதுகாப்பு இடைவெளியை குறைத்துக் கொள்வதிலும் பங்களிப்பு வழங்க முடிந்திருந்தது.” என்றார்.

கோம்ஸ் மேலும் குறிப்பிடுகையில், நிறுவனத்தின் பாங்கசூரன்ஸ் செயற்பாடுகளினூடாக இலாகாப் பெறுமதி பெருமளவு அதிகரித்திருந்ததுடன், நிலைபேறான வியாபார வளர்ச்சிக்கும் வழிகோலியிருந்தது என்றார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம பாங்கசூரன்ஸ் அதிகாரி விந்தியா கூரே குறிப்பிடுகையில், “சிறப்பாக செயலாற்றியிருந்த அனைவருக்கும் பாராட்டுகள். தமது நிபுணத்துவம் மற்றும் அர்ப்பணிப்பு போன்றவற்றினூடாக இவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியிருந்தனர். தாம் மேற்கொள்ளும் சகல செயற்பாடுகளிலும் முன்னேற்றத்தை எய்துவதில் அவர்கள் கவனம் செலுத்துகின்றனர். எம்மிடம் உயர் திறன் படைத்த அணி காணப்படுகின்றது. சிறந்த தொழில்நுட்ப மற்றும் கணனி வசதிகளுடன், எம்மால் சிறந்த தீர்வுகளை வழங்க முடிகின்றது.” என்றார்.

நிறுவனத்தினால் வங்கிப் பங்காளர்களுடன் உறுதியான, தந்திரோபாய உறவுகள் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இவை வெற்றிக்கு பெருமளவில் பங்களிப்பு வழங்கியுள்ளன.

பாங்கசூரன்ஸ் வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில், யூனியன் அஷ்யூரன்சினால் சிறந்த செயற்பாட்டாளர்கள் பலருக்கு கௌரவிப்புகள் வழங்கப்பட்டிருந்தன. விருதுகள் வழங்கும் இரவின் மாபெரும் விருதான, சம்பியன் ஒஃவ் சம்பியன்ஸ் 2021 விருதை, நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி நாளிகையின் நிமேஷா செவ்வந்தி வீரவரண ஜயசேகர வெற்றியீட்டியிருந்தார்.

விருதுகள் வழங்கும் நிகழ்வில், சிறப்பு விருதுகளை நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி நாளிகையைச் சேர்ந்த ஹர்ஷ சுதர்ஷன விஜேசிங்க மற்றும் நிமேஷா செவ்வந்தி வீரவரண ஜயசேகர ஆகியோர் வெற்றியீட்டியிருந்தனர். இவர்கள் இருவருக்கும் தொழில்நிலை மேம்பாட்டுக் கல்வியைத் தொடர்வதற்கான புலமைப்பரிசில் வழங்கப்படும் என்பதுடன், வெளிநாட்டு சுற்றுலா, கம்பனியினால் நிர்வகிக்கப்படும் சொகுசு வாகனம் போன்றன வழங்கப்படும்.

## எல்லாலமுல்ல கிராமத்துக்கு

# Bairaha Farms PLC உதவி

பதப்படுத்திய கோழி இறைச்சி விற்பனையில் ஈடுபடும் Bairaha Farms PLC, கம்பஹா மாவட்டத்தில் உள்ள எல்லாலமுல்ல கிராமத்தில் உள்ள சமூகத்துக்கு உலர் உணவுப் பொருட்களை விநியோகிப்பதன் மூலம் மற்றொரு மகத்தான சமூக பொறுப்புணர்வுச் செயல் திட்டத்தை நிறைவு செய்துள்ளது.

எல்லாலமுல்ல கிராமத்தில் Bairaha பதப்படுத்தும் தொழிற்சாலை அமைந்துள்ளதுடன், இந்த முயற்சியானது கிராம சமூகத்தின் அடிப்படை உணவுத் தேவைகளில் ஒரு பகுதியை அவர்களுக்கு வழங்க உதவுவதை நோக்கமாகக் கொண்ட ஒரு அர்த்தமுள்ள சமூக பொறுப்புணர்வுச் செயல் திட்டமாகும். 400 உலர் உணவுப் பொதிகளின் விநியோகம் எல்லாலமுல்ல விகாரையில் இடம்பெற்றது. பிரதம குரு, எல்லாலமுல்ல கிராம மக்கள் மற்றும் Bairaha Farms PLC நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் 380 உலர் உணவுப் பொதிகள் அப்பகுதியின் உள்ளூர் பள்ளிவாசல் மூலம் விநியோகிக்கப்பட்டன. பொருளாதார நெருக்கடியும், உணவு கிடைப்பதில் சிரமங்களும் எழுந்துள்ள நேரத்தில், அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்களைப் பெற்று எல்லாலமுல்ல சமூகம் பெரிதும் பயனடைந்துள்ளது.

Bairaha Farms PLC நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமைத்துவம் இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "சமூகத்திற்கும் எமது சக இலங்கைப் பிரஜைகளுக்கும் பங்களிப்பாற்றுவது எமது நிறுவன கலாச்சாரத்தின் ஒரு முக்கிய கோட்பாடாக உள்ளதுடன், இது எமது சமூகப் பொறுப்புணர்வுச்



> 18 பாடசாலைகளுக்கும் பிரெய்லி புத்தகங்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் அனைவரையும் அரவணைத்து உள்ளடக்குவதற்கான தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியது

செயல் திட்டங்களிலும் பிரதிபலிக்கின்றது. இந்த பொருளாதார நெருக்கடியின் போது தமது அடிப்படை உணவுத் தேவைகளை பூர்த்தி செய்வதில் பல சவால்களை எதிர்கொள்ளும் குறைந்த வருமானம் ஈட்டுகின்ற மற்றும் நலிவுற்ற சமூகம் எல்லாலமுல்ல கிராமத்தில் உள்ளது. எங்களின் பெறுமதிமிக்க பணியாளர்கள் பலருடன் எங்கள் பதப்படுத்தல் தொழிற்சாலையும் அங்கு அமைந்திருப்பதால், இச்சமூகம் நம் இதயத்திற்கு மிகவும் நெருக்கமானது. அத்தகைய சமூகங்களுக்கு பிரதியுபகாரம் செய்ய வேண்டும்; என்பதில் நாங்கள் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளோம். பொறுப்புணர்வுமிக்க வர்த்தக நிறுவனம் என்ற வகையில், இந்த சந்தர்ப்பத்தில் முன்வந்து அவர்களின் கஷ்டங்களைக் குறைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்," என்று குறிப்பிட்டனர்.

இந்நிறுவனம் அதன் Help to Learn திட்டத்திற்காக புகழ்பெற்றதுடன், இது நாட்டின் பல பகுதிகளில் அமைந்துள்ள 600 க்கும் மேற்பட்ட ஊழியர்களின் பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு உதவி வருகிறது. மாற்றுத்திறனாளிகள், குறிப்பாக விழிப்புலன் குறைபாடு உடையோர் போன்ற பாதிக்கப்படக்கூடிய சமூகங்களை மேம்படுத்துவதற்காக நிறுவனம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. FMCG Asia Awrds விருதுகள் நிகழ்வில் பிரெய்லி (braille) முறையில் உணவு செய்முறைப் புத்தகத்தை வெளியிட்டதற்காக 2021 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சுற்றுச்சூழல் சமூக ஆளுகை முயற்சியின் வெற்றியாளராக Bairaha Farms PLC கௌரவிக்கப்பட்டுள்ளது. Bairaha Farms PLC ஆனது, நாடு முழுவதும் உள்ள அனைத்து விழிப்புலனற்றோருக்கான 18 பாடசாலைகளுக்கும் பிரெய்லி புத்தகங்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் அனைவரையும் அரவணைத்து உள்ளடக்குவதற்கான தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியது.

அமெரிக்கா

உக்ரேன் இராணுவத்துடன்

# அமெரிக்கா இணையும்

உக்ரேன் மீதான ரஷ்யாவின் இராணுவ தாக்குதலானது 150-ஆவது நாளை நெருங்கியுள்ள நிலையில், லுஹான்ஸ்க் மாகாணம் முழுவதுமாக கைப்பற்றிய ரஷ்ய படைகள், கிழக்கு உக்ரேனின் டொனெட்ஸ்க் மாகாணத்தை கைப்பற்ற தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருகின்றன.

போரில் உக்ரேனுக்கு ஆதரவாக இருந்து வரும் அமெரிக்கா, இராணுவம், நிதி மற்றும் மனிதாபிமான உதவிகளை தொடர்ந்து வழங்கி வருகிறது.

இந்நிலையில் உக்ரேனுக்கு மேலும் 400 மில்லியன் டொலர்கள் மதிப்பில் இராணுவ உதவிகளை வழங்கவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

குறிப்பாக அதிநவீன ஏவுகணை அமைப்புகள், பீரங்கி குண்டுகள், இராணுவ கவச வாகனங்கள், ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் உள்ளிட்ட திறன்மிக்க ஆயுதங்கள் இந்தத் தொகுப்பில் அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஆப்கானிஸ்தான்

தலிபான் தலைமையிலான அரசுக்கு

## அமெரிக்கா அங்கிகாரம்?


ஆப்கானிஸ்தானில் தற்போது தலிபான்களின் ஆட்சி இடம்பெற்று வருகின்றது. இந்நிலையில் மத்திய மற்றும் தெற்கு ஆசியாவிற்கான அமெரிக்க உதவி செயலாளர் டொனால்ட் லூ ஒரு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் " ஆப்கானிஸ்தான் அரசுக்கு அங்கிகாரம் வழங்க வேண்டும். இதுதொடர்பாக எந்த ஒரு நாடும் பேசவில்லை. மேலும் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது தலிபான் அரசு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றது.

இதனால் தலிபான் தலைமையிலான அரசுக்கு அங்கிகாரம் வழங்குவது குறித்து சாத்தியம் இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான்


## வெள்ளத்தில் சிக்கி 57 பேர் உயிரழப்பு



தெற்கு பாகிஸ்தானின் பாலூசிஸ்தான் மாகாணத்தில் அண்மைக்காலமாக கடும் மழைபெய்து வருகின்றது.

இதன் காரணமாக 8 அணைகள் உடைந்து, ஊருக்குள் வெள்ள நீர் புகுந்ததில் பெண்கள், குழந்தைகள் உட்பட 57 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நூற்றுக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து வாழ்வாதாரமின்றி தவித்து வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அவுஸ்திரேலியா

## உலக சாதனை படைத்த நடன விழா

அவுஸ்திரேலியாவில் கடந்த 7 ஆம் திகதி நட்புஷ்(Nutbush ) நடன விழாவில் ஒரே நேரத்தில் 4084 பேர் கலந்து கொண்டு நடனமாடி உலக சாதனை படைத்துள்ளனர்.

இந்நடனமானது அந்நாட்டின் அதிகாரப்பூர்வமற்ற தேச நடனமாகக் கருதப்படுகின்றது.

அமெரிக்கா

## திடீரென பச்சை நிறத்தில் மாறிய வானம்;

### பார்வையிடச் சென்றவர்களுக்குக் காத்திருந்த அதிர்ச்சி



அமெரிக்காவின் டகோட்டா மாகாணத்தில் அண்மையில் திடீரென வானம் பச்சை நிறத்தில் மாறிய சம்பவம் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாலை நேர சூரிய கதிர்களில் வளிமண்டத்தில் உள்ள நீர் துளிகள் மற்றும் அதிக அளவிலான பனிக்கட்டிகள் பட்டு எதிரொலிப்பதால் பச்சை வண்ணம் உருவாகலாம் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்நிலையில் வானம் பச்சை நிறத்தில் மாறிய சற்று நேரத்திலேயே மணிக்கு 90 கிலோமீற்றருக்கு அதிகமான வேகத்தில் புயல் காற்று வீசியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிராக்கோ எனப் பெயரிடப்பட்டுள்ள இப் புயல் காரணமாக டகோட்டா மற்றும் நெப்ராஸ்கா பகுதிகளில் உள்ள மின்கம்பங்கள் சாய்ந்ததாகவும், இதனால் ஆயிரக்கணக்கான வீடுகள் இருளில் மூழ்கியதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்

21 வருடங்களுக்குப் பின்னர் தோண்டி எடுக்கப்பட்டது

## 'முல்லா உமரின்' கார்

கடந்த 2001 ஆம் ஆண்டு, அமெரிக்காவின் இரட்டை கோபுரத்தின் மீது, தலிபான்கள் தாக்குதல் நடத்திய சம்பவம், உலகளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. இத் தாக்குதலுக்கு பின்னர், அமெரிக்க இராணுவப் படை, தாலிபான்களை ஒடுக்குவதற்காக ஆப்கானிஸ்தானில் தீவிர தேடுதல் வேட்டையை நடத்தி இருந்தனர். இதனால் அந்நாட்டில் தலிபான்களின் ஆட்சி கலைக்கப்பட்டது.

அச் சமயத்தில், அமெரிக்க படையிடம் இருந்து தப்பிப்பதற்காக தலிபான் அமைப்பை நிறுவிய தலைவர் முல்லா உமர், தான் பயன்படுத்தி வந்த கார் ஒன்றை பயன்படுத்தி, அமெரிக்க இராணுவத்திடம் இருந்து தப்பிச் சென்றாகவும் அக்காரானது பிற்பட்ட காலங்களில் ஆப்கானிஸ்தானில் அமைந்துள்ள கிராமம் ஒன்றில் குழி தோண்டி பு தைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் தற்போது தலிபான்களின் ஆட்சி நடைபெற்று வரும் நிலையில் புதைக்கப்பட்ட குறித்த காரை தலிபான்கள் மீண்டும் சுமார் 21 ஆண்டுகளுக்கு பின்னர் வெளியே எடுத்துள்ளனர்.


தற்போதும் குறித்த காரானது நல்ல நிலையில் இருப்பதாகவும், முன் பக்கம் மாத்திரம் சற்று சேதமடைந்து காணப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் ஆப்கானிஸ்தானின் தேசிய அருங்காட்சியகத்தில், குறித்த காரை தேசிய சின்னமாக வைக்க வேண்டும் என தலிபான்கள் விரும்புவதாகவும் கூறப்பட்டுகின்றது.



பிரித்தானியா

## 104 வருஷமா இங்கேதான் வசிக்கின்றேன் -நெகிழவைக்கும் மூதாட்டி



104 வருடமாக பெண்மணி ஒருவர் ஒரே வீட்டில் வசித்து வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த எல்சி ஆல்காக் என்கிற பெண்மணியே சுமார் 104 வருடமாக பிரித்தானியாவின் பார்கர் எனும் தெருவில் உள்ள மாடி வீடு ஒன்றில் வசித்து வருகின்றார்.

இவர் இதுவரை சுமார் 2 உலகப்போர்களை சந்தித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

1902-ஆம் ஆண்டு இவ் வீட்டை அவரது குடும்பத்தினர் வாடகைக்கு எடுத்துள்ளனர் எனவும் அதன் பின்னர், 1941 ஆம் ஆண்டு அவருக்கு திருமணம் நடைபெற்றுள்ளதாகவும், திருமணத்தின் பின்னர் அவர் தனது கணவருடன் அவ்வீட்டிலேயே வசிக்கத் தொடங்கியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவரது தாய் மற்றும் தந்தையின் மரணத்தின் பின்னர் கடந்த 1960 ஆம் ஆண்டு வங்கியில் இருந்து கடன் பெற்று, சுமார் 25 பவுண்டுக்கு குறித்த வீட்டை வாங்கியுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் தற்போது இவ்வீட்டின் மதிப்பு 75,000 பவுண்டுகள் எனக் கூறப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் "தன் வாழ்வோடு இரண்டற கலந்த இந்த வீட்டை விட்டு தான் பிரியவேயில்லை என்றும், தன்னுடைய இறுதி மூச்சு வரை இவ்வீட்டில் குடியிருக்கவே ஆசைப்படுவதாகவும்" அவர் தெரிவித்துள்ளமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

# முன்னிலையில் இலங்கை






அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் இலங்கை முன்னிலையில் காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், காலியில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இந்த டெஸ்டில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, ஸ்டீவ் ஸ்மித்தின் ஆட்டமிழக்காத 145, மர்னுஸ் லபுஷைனின் 104 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 364 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்ட பிரபாத் ஜெயசூரிய 6, கசுன் ராஜித 2, ரமேஷ் மெண்டிஸ் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்ட இன்னொருவரான மகேஷ் தீக்ஷன ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு, தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் இலங்கை நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 431 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில், தினேஷ் சந்திமால் 118 ஓட்டங்களுடனும், ரமேஷ் மெண்டிஸ் ஏழு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். முன்னதாக, அணித்தலைவர் திமுத் கருணாரத்ன 86, குசல் மெண்டிஸ் 85, டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்ட கமிந்து மெண்டிஸ் 61, அஞ்சலோ மத்தியூஸ் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். பந்துவீச்சில், மிற்செல் ஸ்டார்க் 2, மிற்செல் ஸ்வப்ஸன் 2, நேதன் லையன் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

கல்முனை பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி:

## சம்பியனான கல்முனை அல் பஹ்றியா தேசிய பாடசாலை

எம்.என்.எம். அப்ராஸ்



கல்முனை கல்வி வலயத்தின் முஸ்லிம் கோட்டப் பாடசாலைகளுக்கான மெய்வல்லுநர் போட்டியில் கல்முனை அல் பஹ்றியா தேசிய பாடசாலை சம்பியனானது.

நற்பிட்டிமுனை அஷ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இவ் மெய்வல்லுனர் போட்டியில் கல்முனை, நற்பிட்டிமுனை,மருதமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 14 முஸ்லிம் பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன.

இப்போட்டிகளில் பங்குபற்றிய அல்-பஹ்றியா மகா வித்தியாலய மாணவ, மாணவிகள் 19 முதலாமிடங்களையும், 17 இரண்டாமிடங்களையும், 6 மூன்றாமிடங்களையும் பெற்றிருந்தனர்.



## ஜுவெண்டஸிலிருந்து வெளியேறும் டி லிஜிட்?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் பின்களவீரரான மத்திஜிஸ் டி லிஜிட், அக்கழகத்திலிருந்து வெளியேறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், 22 வயதான டி லிஜிட்டைக் கைச்சாத்திடுவதற்கான போட்டியில் ஜேர்மனியின் புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச் முன்னிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜுவென்டஸுடன் இன்னும் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள டி லிஜிட்டைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சியும் ஆர்வம் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.



## பார்சிலோனாவில் தொடரவுள்ள டெம்பிலி?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் முன்களவீரரான உஸ்மான் டெம்பிலி, அக்கழகத்திலேயே தொடரவுள்ளதாகவும் 2024ஆம் ஆண்டு வரையில் அக்கழகத்துடன் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பார்சிலோனாவுடனான 25 வயதான டெம்பிலியின் ஒப்பந்தமானது கடந்த மாதம் முடிவடைந்த நிலையில், அவரைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி, பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் ஆகியன ஆர்வம் காட்டியமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்துக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய இந்தியா



இங்கிலா ந்துக்கெதிரான இருபதுக்கு  20 சர்வதேசப் போட்டித் தொடரை இந்தியா கைப்பற்றியுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையையடுத்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

இந்தியா: 170/8 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: இரவீந்திர ஜடேஜா ஆ.இ 46 (29), றோஹித் ஷர்மா 31 (20), றிஷப் பண்ட் 26 (15), சூரியகுமார் யாதவ் 15 (11), ஹர்ஷால் பட்டேல் 13 (06) ஓட்டங்கள். பந்துவீச்சு: கிறிஸ் ஜோர்டான் 4/27 [4], றிச்சர்ட் கிளீசன் 3/15 [4])

இங்கிலாந்து: 121/10 (17 ஓவ. )

(துடுப்பாட்டம்: மொயின் அலி 35 (21), டேவிட் வில்லி ஆ.இ 33 (22) ஓட்டங்கள். பந்துவீச்சு: புவ்னேஷ்வர் குமார் 3/15 [3], ஜஸ்பிரிட் பும்ரா 2/10 [3], யுஸ்வேந்திர சஹால் 2/10 [2])

போட்டியின் நாயகன்: புவ்னேஷ்வர் குமார்

# தியாகத்திருநாள்

வடக்கு மற்றும் கிழக்கு உட்பட நாட்டின் சகல பிரதேசங்களிலும், முஸ்லிம்கள் 'ஈதுல் அழ்ஹா' புனித ஹஜ்ஜுப் பெருநாளை, நேற்று (10) விமர்சையாக கொண்டாடினர்.

ஹஜ்ஜின் மகத்துவம், கூட்டு உழ்ஹிய்யா, பெருநாளின் சிறப்புகள், சமூக ஒற்றுமை, இன நல்லுறவு, சக வாழ்வும் போன்ற கருப்பொருளில் குத்பா பேருரைகள் அமைந்திருந்ததோடு, நாட்டில் அமைதி பெற வேண்டுமென விசேட துஆ பிராத்தனைகளும் நிகழ்த்தப்பட்டன. (படங்கள்: தமிழ்மிரர் நிருபர்கள்)

## பரகஹதெனியவில்...





## கல்முனையில்...






## கிண்ணியாவில் ...



## நீர்கொழும்பில்...




## வாழைச்சேனையில்...





## மருதமுனை கடற்கரையில்...





## தீப்பந்த போராட்டம்







## வலு சேர்த்த வர்த்தகர்கள்

## இரு வேறு போராட்டங்கள்





## யாழ்ப்பாணத்தில்...









ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரசாங்கத்தை பதவி விலகுமாறு கோரி, சனிக்கிழமை (09) வடக்கு,கிழக்கு, மலையகம் உள்ளிட்ட கொழும்புக்கு வெளியே நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளின் போது. (தமிழ்மிரர் நிருபர்கள்)

## முல்லைத்தீவில்...

### பிபிலையில்...



### ஹட்டனில்...




### கேகாலையில்...



### மாத்தளையில்...



### தலவாக்கலையில்...







# மக்கள் அலை...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்புமாறு கோரி, நாடளாவிய ரீதியில் சனிக்கிழமை (ஜூலை 09) ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் முன்னெடுக்கப்பட்டன.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம்,அலரிமாளிகை ஆகியன மக்களால் ஆக்கிரமிக்கப்பட்டன. இந்த போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களுக்கு மக்கள் அலையலையாக திரண்டு வந்திருந்தனர்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட இல்லமும் சில விஷமிகளால் தீ வைத்து கொளுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.



## பிரதமர் இல்லம் தீக்கிரை











## ஜனாதிபதி மாளிகையில்









## ஜனாதிபதி செயலகத்தில்





விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 11 ஜூலை 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.